# சுவையான அக்பர் பீர்பால் தர்பார் கதைகள்



## இராமசுப்பிரமணியன்

| எண். | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | அரசர் எது கொடுத்தாலும் சரிபாதி | 1 |
| 2. | காக்கைகளின் எண்ணிக்கை | 7 |
| 3. | அனைவரும் அதிகம் தெரிந்து வைத்திருக்கும் கலை | 10 |
| 4. | முட்டாள்களிடம் பழகும் விதம் | 14 |
| 5. | படகுக் காரனிடமிருந்து வியாபாரப் பொருள்களை மீட்டுத் தந்த பீர்பால் | 17 |
| 6. | சிங்கத்தை அழித்த பீர்பால் | 24 |
| 7. | கோபத்தை அடக்க தண்ணீர் வைத்தியம் | 28 |
| 8. | அக்பரின் தவறை உணர்த்திய பீர்பால் | 32 |
| 9. | இலவசமாய் கிடைத்த பொருளை யாரும் பெரிதாக மதிக்க மாட்டார்கள் | 37 |
| 10. | பாதி வெயில், பாதி நிழல் | 41 |
| 11. | ஓர் அறிஞரின் தாய்மொழி எது என்று கண்டுபிடித்த பீர்பால் | 44 |
| 12. | ஆகாயத்தில் அரண்மனை | 48 |
| 13. | சரியான தீர்ப்பு வழங்கிய பீர்பால் | 55 |
| 14. | சகுனம் பார்ப்பது மூடப்பழக்கமே | 60 |
| 15. | அதிகமான உணவு தின்றும் எடை குறைந்த ஆடு | 65 |
| 16. | அக்பர் பிறை நிலவு போன்றவர் | 69 |
| 17. | வேப்ப மரமே சாட்சி | 73 |
| 18. | இனிப்பு வாசனை | 81 |
| 19. | பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும் | 86 |
| 20. | மகிழும்படி பேசினால் பரிசு கிடைக்கும் | 90 |

RangaRakes

tamilnavarasam.com

# 1. அரசர் எது கொடுத்தாலும் சரிபாதி


அக்பர் டில்லியை ஆண்டு வந்த மொகலாயப் பேரரசர் ஆவார். அவர் மத சகிப்புத்தன்மை உடையவராக இருந்தார். எம்மதமும் சம்மதம் என்று அனைத்து இன மக்களிடமும் அன்பு பாராட்டி வந்தார். 'தீன் இலாஹி' என்ற புதிய மதத்தையும் அவர் தோற்றுவித்தார். மக்கள் மேல் சுமத்தப்பட்டிருந்த 'ஜஸியா' என்ற வரியையும் அவர் நீக்கினார். மொகலாயப் பேரரசர்களுள் அவர் தலைசிறந்து விளங்கினார். அதனால் அவர் புகழ் அனைத்துத் திசைகளிலும் பரவியிருந்தது.

அவருடைய அவையில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய அறிஞர்கள் பலர் இருந்தனர். அக்பர், அவர்களைப் பெரிதும் போற்றி வந்தார்.

பீர்பால் என்ற ஓர் அறிஞர் அறிவாற்றலில் தலைசிறந்து விளங்கினார். அக்பர் அரசவையில் எப்படியாவது தானும் இடம்பெற வேண்டும் என்று எண்ணிய அவர், தன் கிராமத்திலிருந்து பல மைல்கள் நடந்து டில்லிக்கு வந்து விட்டார். அக்பர் அரண்மனை வாயிலருகே வந்து நின்ற பீர்பாலைப் பார்த்த காவலர்கள். அவருடைய ஏழ்மைக் கோலத்தைப் பார்த்து அவரை அரண்மனைக்குள் செல்லாதபடி தடுத்தனர்.



RangaRakes



அன்று அக்பரின் பிறந்தநாளாகும். அதனால் அரண்மனைக்குள் அவரைக் கண்டு ஆசீர்வதிக்க பல நாட்டு மன்னர்களும், அமைச்சர்களும், முக்கியமானவர்களும் சென்றனர். இதைக் கவனித்த பீர்பால், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தானும் எப்படியாவது அரண்மனைக்குள் சென்றுவிட வேண்டும் என திட்டமிட்டார்.

அவர் வாயில் காப்பாளர்களைப் பார்த்து, 'வாயில் காப்போர்களே.... நான் மிகவும் தொலைவிலிருந்து பேரரசர் அக்பரைக் காண வந்துள்ளேன். என் திறமையைக்காட்டி அவருடைய திருக்கரங்களால் பரிசு பெற வந்திருக்கின்றேன். என்னை உள்ளே செல்ல அனுமதியுங்கள்' என்று கெஞ்சினார்.

உடனே, வாயிற் காப்பாளர்கள் பீர்பாலைப் பார்த்து "மனிதனே, உன்னைப் போன்ற சாதாரணமானவர்களை நாங்கள்



tamilnavarasam.com

அரண்மனைக்குள் அனுமதிக்க இயலாது. நீங்கள் உமது ஊருக்குத் திரும்புவதுதான் உங்களுக்கு நல்லது'' என்றனர்.

பீர்பால் விடுவதாக இல்லை. அவர் மீண்டும் வாயிற்காப்பாளர்களைப் பார்த்து, "வாயிற்காப்பாளர்களே, நான் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஆக வேண்டும்.

இன்றைக்கு விட்டு விட்டால், இனி அடுத்த பிறந்தநாள் வரைக் காத்திருக்க வேண்டி வரும். தயவு செய்து என்னை அரண்மனைக்குள் செல்ல அனுமதியுங்கள்.

அதுமட்டுமல்ல. நாள் அரசரைக் கண்டு என் திறமையை அவரிடம் காண்பித்து வெற்றி பெற்றால்... அரசர் எனக்கு வழங்கும் பரிசில் சரிபாதியை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன். இல்லையென்றால், நீங்கள் சொல்லும் எந்த வேலையையும் நான் செய்யத் தயாராக இருக்கிறேன். அதனால் தயவு செய்து இப்பொழுது என்னை உள்ளே செல்ல அனுமதியுங்கள்'' என்றார்.

அரசர், பீர்பாலுக்குப் பெரிய பரிசு தருவார். அதனைத் தாங்கள் இருவரும் சரிபாதியாகப் பிரித்துக் கொள்ளலாம் என்று எண்ணிய அந்த இரண்டு வாயில் காப்பாளர்களும், பீர்பாலை அரண்மனைக்குள் செல்ல அனுமதித்து விட்டனர்.

பீர்பால் மிகுந்த மகிழ்ச்சியோடு அக்பரின் அரண்மனைக்குள் நுழைந்தார்.



RangaRakes

அக்பர், அரசவையில் சிங்கம்போன்று மிடுக்காக அமர்ந்திருந்தார்.

திறமையைக் காட்டும் அறிஞர்கள் நிற்கும் வரிசையில் பீர்பாலும் நின்றார். ஒவ்வொருவரும் தங்களது திறமையைக் காட்டி அக்பரிடம் பரிசுகளைப் பெற்றுச் சென்று கொண்டிருந்தனர்.

பீர்பாலின் முறை வந்தது. அவர் அக்பரைப் பார்த்து, "புண்ணிய பூமியாக விளங்கும் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளை ஆளும் பேரரசரே, உங்களுக்கு எளியேனின் அன்பு வணக்கம். என் பெயர் பீர்பால், வெகு தொலைவிலிருந்து உங்களைக் காண இங்குநான் வந்துள்ளேன். உங்களைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்து விட்டேன். இந்த நாள் என் வாழ்விலேயே மிகவும் மகிழ்ச்சியான நாளாகும். உங்களின் பொற்கரங்களால் பரிசு பெறுவதை நான் பெரும் பாக்கியமாக எண்ணுகிறேன்'' என்று பணிவுடன் கூறினார்.

இதனால் பெரிதும் மகிழ்ந்த அக்பர், பீர்பாலைப் பார்த்து, "அறிஞரே, உங்களின் பேச்சு பலாச்சுளைப் போல் இனிக்கிறது. ஒரு பேரரசரிடம் எப்படி சாதுரியமாகப் பேச வேண்டும் என்னும் கலையை நீங்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகள். உங்களுக்கு என்ன பரிசு வேண்டும்? கேளுங்கள் தருகிறேன்'' என்றார்.



tamilnavarasam.com

உடனே மனம் மகிழ்ந்த பீர்பால், அக்பரைப் பார்த்து "பேரரசரே, எனக்கு நூறு சவுக்கடிகளைப் பரிசாகத் தாருங்கள். அவற்றை நான் பெருமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன்" என்றார்.

பீர்பால் இவ்வாறு கூறியது கண்டு அக்பர் உட்பட அவையில் இருந்தோர் அனைவருமே அதிர்ந்தனர்.

உடனே அக்பர், பீர்பாலைப் பார்த்து, "பீர்பால் உங்களுக்கு அறிவு கெட்டு விட்டதா? நூறு சவுக்கடிகளைப் பரிசாகக் கேட்கிறீர்களே. அவற்றைத் தருவதற்கு நான் ஆணையிட்டால் உங்கள் உடம்பு புண்ணாகி விடுமே" என்றார்.

உடனே பீர்பால், அக்பரைப் பார்த்து, "பேரரசரே, சவுக்கால் அடிப்பவனை மேலே அனுப்புங்கள்" என்றார்.

அக்பர் ஆணையிட்டார்.

சவுக்கால் அடிப்பவன் அடுத்த நொடியில் பீர்பால் முன் நின்றான்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து "பேரரசே... ஒரு நிமிஷம்... எனக்குத் தாங்கள் வழங்கும் பரிசை, அரண்மனை வாயில் காப்பாளர்கள் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்வதாகக் கூறித்தான் என்னை அரண்மனைக்குள் அனுமதித்தனர். எனவே, எனக்குத் தாங்கள் வழங்கும் நூறு சவுக்கடிகளை, அந்த இரண்டு வாயில்



RangaRakes

காப்பாளர்களுக்கும் சரிபாதியாக, அதாவது, ஆளுக்கு ஐம்பதாகப் பகிர்ந்து கொடுத்து விடுங்கள்" என்றார்.

ஊழல் செய்யும் அந்த இரண்டு வாயில் காப்பாளர்களை அக்பர் அழைத்து, அவர்கள் இருவருக்கும் தலா ஐம்பது சவுக்கடிகள் வழங்க உத்தரவிட்டார்.

அரண்மனை ஊழலின் ஆரம்பத்தைக் கண்டுபிடித்த பீர்பாலின் மதிநுட்பத்தைப் பாராட்டி, அவரைத் தம், அரண்மனையிலேயே தங்க வைத்துக் கொண்டார்.

இதனால் பீர்பால் பெரிதும் மனம் மகிழ்ந்தார்.



tamilnavarasam.com

## 2. காக்கைகளின் எண்ணிக்கை

ஒருநாள் அக்பரும், பீர்பாலும் ஒரு விஷயம் குறித்து காலார நடந்த வண்ணம் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது அக்பர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால் உங்களை எல்லோருமே சிறந்த அறிவாளி எனப் போற்றுகின்றனர். சிறந்த அறிவாளியாக இருப்பவன் எத்துணை சிக்கலான கேள்விக்கும் உடனே பதில் கூறி விடுவான். அந்தத் திறமை உங்களிடம் உண்மையிலேயே இருக்கிறதா?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து "பேரரசே, மக்கள் என்னைத் தலைசிறந்த அறிவாளி என்று போற்றுகிறார்கள் என்று நீங்கள் கூறுகிறீர்கள். தலைசிறந்த அறிவாளி எத்துணை சிக்கலான கேள்விகளுக்கும் உடனே பதில் கூறிவிடுவான் என்று கூறினீர்கள். என் திறமையில் உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்கள் தாராளமாக என்னைச் சோதிக்கலாம்" என்றார்.

உடனே அக்பர் சற்று நேரம் யோசித்து விட்டு, "பீர்பால் நமது நகரில் எத்தனை காகங்கள் இருக்கின்றன தெரியுமா? அவற்றின் எண்ணிக்கைகளை நீங்கள் சரியாகச் சொல்ல வேண்டும்" என்றார்.



RangaRakes



தான் கேட்டது மிகவும் கடினமான கேள்வி என்றும், அதற்கு பீர்பால் விடை சொல்ல முடியாது என்றும் எண்ணி தனக்குள் பெருமைப்பட்டார் அக்பர்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, "பேரரசே, நமது நகரில் மொத்தம் பதினோராயிரம் காக்கைகள் உள்ளன" என்றார்.

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், உங்களுடைய கணக்கு சரிதானே? நமது நகரில் மொத்தம் பதினோராயிரம் காக்கைகள் தான் இருக்கின்றனவா? இவற்றுள் ஒன்று குறைந்தால் உங்கள் எண்ணிக்கைத் தவறாகி விடுமே" என்று கூறினார்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, "பேரரசே, நான் கூறிய எண்ணிக்கையில் ஒன்றிரண்டு குறைந்தால், அவை நம் நகரிலிருந்து வெளியூருக்குச் சென்றிருக்கலாம்" என்றார்.

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து, "நீங்கள் கூறிய எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தால் என்ன செய்வது?" என்று கேட்டார்.



tamilnavarasam.com

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, 'வெளியூரிலிருந்து மேலும் சில காக்கைகள் நம் நகருக்கு வந்திருக்கலாம்' என்று பதில் அளித்தார்.

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து "பீர்பால், உண்மையிலேயே நீங்கள் தலைசிறந்த அறிவாளிதான். எத்துணை சிக்கலான கேள்விக்கும் கூட நீங்கள் எளிதாகவே பதில் கூறி விடுகிறீர்கள். உங்களைப் போன்ற தலைசிறந்த அறிவாளி என் அரசவையில் இருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், பெருமையையும் அளிக்கிறது" என்று கூறிப் பாராட்டினார்.

அக்பர் பீர்பாலுக்கு நிறைந்த பரிசில்களையும் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

## 3. அனைவரும் அதிகம் தெரிந்து வைத்திருக்கும் கலை

பேரரசர் அக்பர் அரியணையில் அமர்ந்திருந்தார். அப்போது அவையில் இருந்த அறிஞர்களிடையே விவாதம் ஒன்று மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

விவாதத்தின் கருத்து என்னவென்றால், அனைவரும் அதிகம் தெரிந்து வைத்திருக்கும் கலை என்ன? என்பது பற்றியதுதான்.

அமைச்சர் முதல் அனைவருமே தங்களுக்குத் தெரிந்தவற்றை மட்டுமே கூறினர். அந்த விவாதமானது முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீண்டு கொண்டே சென்றது.

ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை நிரூபிக்க இயலாமல் இருந்தனர். அனைவருமே தங்கள் மனதில் பட்ட கருத்தை மட்டுமே கூறினர்.

அரசவையில் இருந்தோர் அனைவரும் கூறுவதை பீர்பால் கவனித்துக் கொண்டிருந்தாரே தவிர, அவர் வாய் திறக்காமல் அமைதியாக இருந்தார்.

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால் அனைவருமே தங்கள் கருத்துக்களைக் கூறிக் கொண்டிருக்க, நீங்கள் மட்டும் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.



tamilnavarasam.com

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, "பேரரசே, அனைவரும் என்ன கூறுகிறார்கள் என்பதை இதுவரை நான் கவனித்துக்கொண்டிருந்ததால் மௌனமாக இருந்தேன்" என்றார்.

பிறகு அவரே மன்னரைப் பார்த்து, "பேரரசே, அனைவரும் அதிகம் தெரிந்து வைத்திருக்கும் கலை மருத்துவம் தான்" என்று பதில் கூறினர்.

உடனே அக்பர் வியப்புடன், "பீர்பால், மருத்துவக் கலையையா அனைவரும் அதிகம் தெரிந்து வைத்திருக்கிறார்கள்?" என்று கேட்டார்.

பீர்பாலும், 'ஆமாம் மன்னா' என்று கூறிவிட்டு, "சிறிது கால அவகாசம் எனக்குத் தேவை. நான் சொன்னதை நிரூபித்துக் காட்டுகிறேன்" என்றார்.

சில நாள்கள் கழிந்தன. பீர்பால் தன் கையில் பெரிய கட்டு ஒன்று கட்டியிருந்தார். தெரு வழியே நடந்து சென்று கொண்டிருந்தார்.

வழியில் செல்வோர் பலரும் பீர்பால் தம் கையில் கட்டுப் போட்டிருந்ததைப் பார்த்து, "ஏன் கையில் கட்டுக் கட்டியிருக்கிறீர்கள்" என்று விசாரித்தனர்.

பீர்பால் அவர்களைப் பார்த்து, "பள்ளத்தில் விழுந்ததால் கையில் அடிபட்டு விட்டது. அதனால் கட்டுப் போட்டிருக்கிறேன்" என்று கூறினார்.



RangaRakes

அதனால் அவர்மேல் இரக்கம் கொண்ட அவர்கள் தங்களுக்குத் தெரிந்த மருத்துவ முறைகளைக் கூறினர். அவர் இப்படியே அரண்மனைக்குச் சென்று சேரும்வரை வழியில் செல்வோர் கூறும் பல்வேறு வைத்தியமுறைகளைக் கேட்டுக் கொண்டே சென்றார்.

பீர்பால் இறுதியில் அக்பரின் அரசவையை அடைந்தார். பீர்பால் தன் கையில் போட்டிருந்த கட்டைப் பார்த்து அக்பரும் வேதனைப்பட்டார்.

அவரும் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், நீங்கள் சிறிதும் கவலைப்படாதீர்கள். எனக்கு ஒரு வைத்தியம் தெரியும். அதனை நான் உங்களுக்குக் கூறுகிறேன். வீட்டிற்குச் சென்றதும் செய்து பாருங்கள். விரைவில் குணம் அடைவீர்கள்" என்றார்.

உடனே பீர்பால் சிரித்தபடியே அக்பரைப் பார்த்து, "பேரரசே அதற்கெல்லாம் அவசியமே இல்லை. என்கையில் காயம் எதுவும் இல்லை. வெறுமனே துணியைச் சுற்றியிருக்கிறேன்" என்று கூறி தன்கையில் சுற்றியிருந்த துணியைக் கழற்றி எறிந்தார்.

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து "பீர்பால், உங்கள் விளையாட்டிற்கு ஓர் அளவில்லையா? இப்படியா என்னையும், மக்களையும் ஏமாற்றுவது?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, "பேரரசே, விளையாட்டெல்லாம் ஒன்றும் இல்லை. நான் கையில் கட்டுப் போட்டிருந்ததைப் பார்த்த



tamilnavarasam.com

மக்கள் உட்பட நீங்களும் உங்களுக்குத் தெரிந்த மருத்துவமுறைகளைக் கூறினீர்கள்.

இதன் மூலம், அனைவரும் அதிகம் தெரிந்து வைத்திருக்கும் கலை மருத்துவம்தான் என்னும் என் கூற்றை நான் நிரூபித்து விட்டேன்'' என்றார்.

இதனால் அக்பர் பெரிதும் மகிழ்ந்து, பீர்பாலின் அறிவுக் கூர்மையைப் பாராட்டினார்.



RangaRakes

## 4. முட்டாள்களிடம் பழகும் விதம்

மாலை நேரம். சூரியன் தன் மஞ்சள் நிறக் கதிர்களை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தான்.

யமுனை நதியின் கரையோரம்.

பேரரசர் அக்பரும், பீர்பாலும் அந்த மாலையின் இனிமையான பொழுதை மிகவும் மகிழ்ச்சியாக அனுபவித்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது அக்பர் பீர்பாலைப் பார்த்து, ''பீர்பால், எனக்கு ஒரு சந்தேகம்'' என்றார்.

அதற்கு பீர்பால், ''சொல்லுங்கள் அரசே, நான் தீர்த்து வைக்கிறேன்'' என்றார்.

பிறகு அக்பர் பீர்பாலை நோக்கி, ''முட்டாள்களிடம் எப்படிப் பழக வேண்டும்? அதைக் குறித்து உங்கள் கருத்தைக் கூறுங்கள்'' என்றார்.

பீர்பால் பதில் ஏதும் கூறாமல் அமைதியாக யமுனை நதியை இரசித்தபடியே முன்னோக்கி நடந்து கொண்டிருந்தார். உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து, ''என்ன பீர்பால், நான் கேட்ட கேள்வி உங்களது காதில் விழவில்லையா? முட்டாள்களிடம் பழகும் விதம் பற்றி எனக்கு நீண்ட நாள்களாகவே சந்தேகம் இருக்கிறது'' என்றார்.



tamilnavarasam.com

இப்பொழுதும் பீர்பாலிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

ஒருவேளை தான் சொன்னது பீர்பால் காதில் விழவில்லையோ என எண்ணிய அக்பர், பீர்பாலை நோக்கி "பீர்பாலே, முட்டாள்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்று கூறுங்கள் என்று முன்பை விட அதிக சப்தமாகக் கேட்டார்."

பீர்பால் முன்பைப் போலவே, ஒன்றும் தெரியாதவரைப்போல அமைதியாக நடந்து சென்றார்.

சூரியன் மேற்கில் மறைந்து கொண்டிருந்தான். காற்று 'சில்லென்று' வீசி அவர்கள் இருவருடைய உடலையும் குளிர்வித்தது.

இப்பொழுது அக்பர் மீண்டும் பீர்பாலை நோக்கி, "பீர்பால், நான்



RangaRakes

இந்த நாட்டின் பேரரசன் என்பது உங்களுக்குத் தெரியுமா தெரியாதா?" என்று மிகுந்த கோபமாகக் கேட்டார்.

அதற்கு பீர்பால் அக்பரை நோக்கி, "நன்றாகத் தெரியும்" என்று பதில் அளித்தார்.

உடனே அக்பர் பீர்பாலிடம் "பிறகு ஏன் முட்டாள்களிடம் எப்படிப் பழக வேண்டும் என்று கேட்டால், பதில் கூறாமல் அமைதியாக இருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

பிறகு பீர்பால் மன்னரிடம், "பேரரசே தாங்கள் என்னிடம் கேட்ட கேள்வியிலேயே பதில் அடங்கியிருக்கிறது" என்றார்.

உடனே அக்பர் பீர்பாலிடம் "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் பீர்பால்? நான் கேட்ட கேள்விக்குத்தான் நீங்கள் இன்னும் வாய் திறந்து பதிலே சொல்லவில்லையே" என்றார்.

உடனே பீர்பால் மெல்ல புன்னகைத்தபடி அக்பரைப் பார்த்து "பேரரசே, முட்டாள்களுடன் பழக நேர்ந்தால் நாம் வாய் திறக்காமல் அமைதியாக விலகிச் செல்வதே நல்லது. இதைத்தான் நான் மௌனமாக உங்களுக்கு உணர்த்தினேன்" என்று விளக்கினார் பீர்பால்.

உடனே அக்பர் பெருமகிழ்ச்சி அடைந்து பீர்பாலுக்கு நிறைய பரிசில்களை வழங்கிப் பெருமைப்படுத்தினார்.



tamilnavarasam.com

## 5. படகுக்காரனிடமிருந்து வியாபாரியின் பொருள்களை மீட்டுத் தந்த பீர்பால்

ஒருநாள் வியாபாரி ஒருவர் டெல்லியில் வாணிகம் செய்வதற்காக தன் பொருள்களை படகு மூலம் கொண்டு வந்தார்.

வியாபாரி படகுக்காரனிடம், படகில் ஏற்றுவதற்கான பொருள்களின் வாடகை எல்லாம் பேசித்தான் பொருள்களை ஏற்றினார்.

நதியில் பயணம் செய்யும் வரை அமைதியாக இருந்த படகுக்காரர், படகு கரைக்கு வந்ததும் தன் உண்மையான குணத்தை காட்டத் தொடங்கினார்.

படகு கரைக்கு வந்ததும், வியாபாரி தன் பொருள்களை இறக்க முனையும்போது படகுக்காரர் அப்பொருளை இறக்க விடாமல் தகறாறு செய்தார். வியாபாரி பயந்து விட்டார்.

வியாபாரி படகுக்காரரைப் பார்த்து, "ஐயா, படகில் இருக்கும் என் பொருள்களை இறக்க ஏன் தடுக்கிறீர்கள்?" எனக் கேட்டார்.

உடனே படகுக்காரர் வியாபாரியை அலட்சியமாகப் பார்த்து விட்டு, "வியாபாரியே, இந்தப் பொருள்கள் எல்லாம் எனக்குச் சொந்தமாகும். அவ்வாறு இருக்கும்பொழுது நீங்கள் எப்படி என்



பொருள்களை உங்களுக்குச் சொந்தம் என உரிமை கொண்டாடி இறக்கி விட முடியும்?" என மிரட்டினார்.

வியாபாரி பெரும் வேதனை அடைந்தார்.

அவர் படகுக்காரனைப் பார்த்து, "ஐயா, தாங்கள் இப்படி அடாவடித்தனம் செய்வது சரியல்ல. பொருள்களை ஏற்றி வந்ததற்கான கட்டணத்தை மட்டுமே நீங்கள் பெற்றுக்கொள்ளலாமே தவிர, என் பொருள்களையே உங்களுக்குச் சொந்தம் என உரிமை கொண்டாடுவது முறையல்ல" என்றார்.


உடனே படகுக்காரர் வியாபாரியைப் பார்த்து, "வியாபாரியே, எனக்கு நீங்கள் கூறும் நியாயத்தைக் கேட்டுக் கொண்டிருக்க நேரம் இல்லை. இப்பொழுது நீங்கள் படகை விட்டு இறங்குங்கள்" என்றார்.

வியாபாரி செய்வதறியாது கண் கலங்கினார். மிகுந்த மன வருத்தத்துடன் படகை விட்டு இறங்கினார்.

அக்பர் ஆட்சி செய்யும் இந்த டெல்லி மாநகரில் நல்ல வாணிகம் செய்யலாமே என்றுதானே வந்தோம். நம் நிலைமை இப்படி ஆகிவிட்டதே. நாம் நினைத்தது ஒன்று. நடந்தது வேறொன்றாக இருக்கிறதே. இறைவன்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும், என்று மனதில் எண்ணியபடியே சென்றார்.



RangaRakes
tamilnavarasam.com



பேரரசர் அக்பரைப் பார்த்து அவரிடம் முறையிட்டால் தனக்கு நிச்சயம் நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நம்பிய வியாபாரி அரண்மனையை நோக்கி நடந்தார்.

அரச சபையில் அக்பர் கம்பீரமாக அமர்ந்திருந்தார். உடனே வியாபாரி மன்னரைக்கண்டு, பேரரசர் அவர்களுக்கு என் பணிவான வணக்கம், என்றார்.

அக்பர் அந்த வியாபாரியைப் பார்த்து, "நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார்.

உடனே அந்த வியாபாரி அரசரைப் பார்த்து, "மேன்மை பொருந்திய மன்னரே, நான் வெளியூரைச் சேர்ந்த வியாபாரி. டெல்லியில் வியாபாரம் செய்யலாம் என்று, என் பொருள்களுடன் வந்தேன்.

என் பொருள்களை எல்லாம் படகின் மூலம்தான் கொண்டு வந்தேன். அந்தப் பொருள்களுக்கான வாடகையை நான் செலுத்தி விட்டேன். ஆனால், படகுக்காரரோ என் பொருள்கள் அனைத்தையும் தனது பொருள்கள் எனக்கூறி என்னைப் படகிலிருந்தும் இறக்கி விட்டார்.



என் பொருள்களை மீட்டுத் [illegible] உங்களை வந்துள்ளேன். தாங்கள் எனக்கு [illegible] நல்ல தீர்ப்பு வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களைத் தேடி வந்தேன் என்றார்."

பேரரசர் அக்பரும், வியாபாரியிடம் முழுமையாக நடந்தவைகளைக் கேட்டுக் கொண்டார். அருகில் இருந்த பீர்பாலிடம் கலந்து ஆலோசித்தார்.

பின்னர் வியாபாரியைப் பார்த்து, "நீங்கள் நிம்மதியாகச் செல்லுங்கள். உங்களுக்கு உரிய நீதி விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

வியாபாரியும் மகிழ்ந்து, மன்னரிடம் விடை பெற்றுச்சென்றார்.

அடுத்த நாள் பீர்பால், வியாபாரியின் பொருள்கள் உள்ள படகை நோக்கிச் சென்றார். படகுக்கு அருகில் படகின் சொந்தக்காரர் நின்று கொண்டிருந்தார். அவர் பீர்பாலைப் பார்த்ததும், தன் படகில் உள்ள பொருள்களைப் பற்றியும் அவற்றை விற்பது குறித்தும் பேசினார்.

பீர்பாலும் அவர் கூறியதையெல்லாம் விவரமாகக் கேட்டுக் கொண்டார். பிறகு அவர் படகுக்காரரைப் பார்த்து, "படகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் நானே வாங்கிக் கொள்கிறேன். எவ்வளவு பணம் தேவையெனக் கூறுங்கள்" என்று கேட்டார்.

உடனே படகுக்காரர் பீர்பாலைப் பார்த்து, “பத்தாயிரம் தாருங்கள்” என்றார்.

உடனே பீர்பால், “விலை அதிகம்”, என்றார்.

உடனே அந்தப் படகுக்காரர் “ஏழாயிரம் ரூபாய்க்குத் தருகிறேன் வாங்கிக்கொள்ளுங்கள்” என்றார்.

உடனே பீர்பால், “இன்னும் சற்றுக் குறையுங்கள்” என்றார்.

அந்தப் படகுக்காரரும், “முதலும் கடைசியுமாக இப்பொருள்களின் விலை ஐந்தாயிரம் ரூபாய்” என்றார்.

அந்த நேரத்தில் வியாபாரியும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

அந்த வியாபாரி பீர்பாலைப் பார்த்து, “ஐயா, இந்தப் படகில் உள்ள பொருள்கள் யாவுமே என்னுடையவை” என்றார்.

உடனே பீர்பால் அந்தப படகுக்காரரைப் பார்த்து, “என்ன படகுக்காரரே, இந்தப் பொருள்கள் எல்லாம் இவருடையவை என உரிமை கொண்டாடுகிறாரே” எனக் கேட்டார்.

உடனே படகுக்காரர் பீர்பாலைப் பார்த்து அவசரமாக, “ம்... ஹும். இதில் எந்தப் பொருளும் அவருடையதல்ல. சரி... நீங்க எவ்வளவு கொடுக்க விரும்புகிறீர்களோ கொடுங்கள்” என்றார்.



உடனே பீர்பால் படகுக்காரரைப் பார்த்து, “நீங்கள் சற்று அமைதியாக இருங்கள். அருகில் இருப்பவரிடமும் கேட்டுப் பார்த்து விடலாம்” என்றார்.

படகுக்காரர் அமைதியாக இருந்தார்.

பீர்பால் தம் அருகில் இருந்தவர்களிடம், “ஐயா, படகில் உள்ள பொருள்களை நான் விலைக்கு வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை தரலாம் சொல்லுங்கள் பார்ப்போம்” என்றார்.

உடனே அவர், “இருபத்தையாயிரம் ரூபாய் ஆகும். அதற்கு நூறு ரூபாய் குறைந்தாலும் கூட முதலுக்கே மோசமாகி விடும்” என்றார்.

உடனே பீர்பால் அவரைப் பார்த்து, “அப்படியா சரி வாருங்கள் பார்க்கலாம்” என்று கூறி, படகில் உள்ள பொருள்களைப் பார்வையிட்டார்.

பிறகு பீர்பால் படகுக்காரரைப் பார்த்து, “அய்யா இந்தப் பொருள்கள் உம்முடையவை அல்ல” என்றார்.

உடனே படகுக்காரர், “இல்லையில்லை, அவை யாவுமே என்னுடையவையே என பயத்தில் உளறினார்.”

உடனே பீர்பால் கோபத்துடன் அந்தப் படகுக்காரரைப் பார்த்து,

"இனிமேலும் பொய் கூறாதீர்கள். உண்மையை ஒப்புக் கொண்டால் தண்டனையிலிருந்து தப்பலாம்" என்று மிரட்டினார்.

உடனே படகுக்காரர் பயந்து பீர்பாலின் காலில் விழுந்தார். அவர் பீர்பாலைப் பார்த்து, "ஐயா, என்னை மன்னியுங்கள்.

பொருள்மீது உள்ள ஆசையில் இப்படித் தவறு செய்து விட்டேன்.

படகில் இருக்கும் பொருள்கள் எவையும் என்னுடையவை அல்ல" என்றான்.

பீர்பால் படகுக்காரரைப் பார்த்து, "பொருள்மேல் ஆசைப்படுவது தவறில்லை. ஆனால், அந்தப் பொருளை நீங்கள் உழைத்துப் பெறவேண்டும். பிறர்க்கு உரிய பொருள்களை நீங்கள் அநியாயமாக உங்களுடையவை என உரிமை கொண்டாடக் கூடாது. அதனால், இனிமேலாவது உழைத்துப் பொருள் சம்பாதிக்க ஆசைப்படுங்கள்" என்றார்.

உடனே பீர்பால், வியாபாரியின் பொருள்களை அவரிடம் ஒப்படைத்து மகிழ்ந்தார். வியாபாரி பேரரசர் அக்பருக்கும், மதியூகி பீர்பாலுக்கும் தன் நன்றியைத் தெரிவித்தான்.

நீதியை மிகவும் சாதுரியமாக நிலைநாட்டிய பீர்பாலை அக்பர் பெரிதும் பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

# 6. சிங்கத்தை அழித்த பீர்பால்

பெர்ஷிய மன்னரும், மொகலாயப் பேரரசர் அக்பரும் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். இருவரும் கடிதங்கள் மூலம் வித்தியாசமான புதிர்களை பரிமாறிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அக்பர் அரியணையில் கம்பீரமாக அமர்ந்திருந்தார்.

அப்போது நான்கு பெர்ஷிய வீரர்கள் திரையில் மூடப்பட்ட ஒரு பொருளைப் பல்லக்கில் வைத்து சுமந்து வந்தனர் அவர்கள் பேரரசர் அக்பரைப் பணிவுடன் வணங்கினர்.

அவர்களுள் ஒருவன் அரசரிடம் கடிதச்சுருள் ஒன்றைக் கொடுத்து, பணிவுடன் ஒரு ஓரமாக நின்றான்.

அக்பர் அந்த நான்கு பெர்ஷிய வீரர்களையும் பார்த்து, வீரர்களே! "பல்லக்கில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார்.

உடனே அந்த நான்கு வீரர்களும், பல்லக்கை மூடியிருந்த துணியை விலக்கினர்.

அதில் இருந்த பொருளைக் கண்டு அக்பர் உட்பட அரசவையில் இருந்த அனைவருமே அதிர்ந்தனர்.

கூண்டுக்குள் ஒரு சிங்கம் மிகவும் தத்ரூபமாக, கம்பீரமாகக்



tamilnavarasam.com

காட்சியளித்தது. அது மெழுகினால் செய்யப்பட்டிருந்தது. ஆனால் அது எந்தப் பொருளால் செய்யப்பட்டிருந்தது என்பது அக்பர் உட்பட அங்கிருந்த யாருக்குமே தெரியவில்லை.

அந்த நான்கு பெர்ஷிய வீரர்களுள் ஒருவன் அக்பரைப் பார்த்து, "பேரரசே, இந்தச் சிங்கத்தைக் கூண்டிலிருந்து வெளியே எடுக்காமல் அப்படியே அழித்துவிட வேண்டும். இதை மூன்று வாரத்திற்குள் செய்துவிட வேண்டும் என்று எங்கள் அரசர் கூறியுள்ளார்" என்றான்.

மேலும் அவன் கொண்டு வந்த கடிதச்சுருளில், "எனது அருமை நண்பர்களே... சிங்கத்தை வெளியே எடுக்காமல் அழிப்பவர்களுக்கு 10,000 பொற்காசுகளைப் பரிசாகத் தருகிறேன்" என்றும் எழுதியிருந்தார் அந்த பெர்ஷிய அரசர்.

அந்த நேரத்தில் பீர்பால் ஊரில் இல்லை. அவர் ஒரு முக்கியமான வேலை விஷயமாக வெளியூர் சென்றிருந்தார். இது தங்கள் நாட்டிற்கு விடுக்கப்பட்ட மிகப்பெரிய சவாலாக நினைத்தார் அக்பர்.

அரசவையில் இருந்த அறிவாளிகள் அனைவருமே கூண்டைச் சுற்றிச் சுற்றி வந்தார்களே அன்றி, வேறொன்றையும் அவர்களால் செய்ய முடியவில்லை.

இப்படியே ஒரு வாரகாலம் கடந்தது.

சிங்கத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை.



RangaRakes

அக்பர் மிகவும் வேதனை அடைந்தார். இவ்வளவு சிறந்த அறிவாளிகள் இருந்தும் இதற்கொரு வழி கண்டுபிடிக்க முடியவில்லையே எனக் கவலைப்பட்டார்.

இப்படியே இரண்டாவது வாரமும் கடந்து விட்டது. இன்னும் மூன்றே நாள்கள் அவகாசம் இருந்த வேளையில் அக்பர் வீற்றிருந்த அரசவையில் பீர்பால் நுழைந்தார். அரசர் உட்பட அனைவரின் முகங்களிலும் பெருமகிழ்ச்சி தாண்டவமாடியது.

பீர்பால் அக்பரை நோக்கி, "பேரரசே வணக்கம். நான் நேற்றே ஊரிலிருந்து திரும்பிவிட்டேன். என் உறவினர் ஒருவருக்கு உடல்நலம் சரியில்லாததால் அவரைக் காண ஊருக்குச் சென்றிருந்தேன். ஏன் எல்லோரும் எதையோ இழந்தது போல் சோகத்தில் காணப்படுகிறீர்கள்? என்ன ஆயிற்று உங்களுக்கு?" என்று கேட்டார்.

அரசர் விஷயத்தைக் கூறினார்.

"எங்கே அந்த தத்ரூபமான சிங்கம்?" பீர்பால் கேட்டார்.

காவலர்கள் அதனைத் தூக்கிக் கொண்டு வந்து பீர்பால் முன் வைத்தனர். பீர்பால் சிங்கக் கூண்டைத் திறந்தார்.

கையை விட்டு சிங்கத்தின் உருவத்தைத் தொட்டுப் பார்த்து, மூக்கில் கை வைத்துப் பார்த்தார்.



tamilnavarasam.com

உடனே காவலர் ஒருவரை அழைத்து, இரும்புக்கம்பி ஒன்றைப் பழுக்கக் காய்ச்சி கொண்டு வருமாறு கூறினார்.

உடனே காவலர் விரைந்து சென்று, பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைக் கொண்டு வந்தார்.

பீர்பால் அதனை வாங்கி, சிங்கத்தின் தலைமேல் வைத்தார். அடுத்த சில நிமிடங்களில் அது மெழுகாய் உருகிக் கரைந்து, ஒன்றுமில்லாமல் போனது.

அக்பர் உட்பட அங்கிருந்தோர் அனைவருமே இந்த அதிசயக் காட்சியைக் கண்டு வியந்தனர்.

உடனே அரசர் பீர்பாலை நோக்கி "பீர்பால், அந்தச் சிலை எப்படி கரைந்தது?" என்று வியப்புடன் வினவினார்.

உடனே பீர்பால் அரசரைப் பார்த்து, "அரசே... அந்தச் சிங்கத்தின் சிலையானது ஒருவகை மெழுகினால் செய்யப்பட்டதாகும். அது நெருப்பில் பட்டதும் உருகிவிடும். அவ்வளவுதான்" என்றார்.

உடனே அக்பர் பீர்பாலை மனம் திறந்து பாராட்டினார். "பீர்பால் உன் திறன் ஆச்சரியப்படத்தக்கது" எனப் போற்றினார். பெர்ஷிய அரசரிடமிருந்து பரிசுகளையும் பீர்பாலுக்கு வாங்கித் தந்தார் அக்பர்.



RangaRakes

## 7. கோபத்தை அடக்க தண்ணீர் வைத்தியம்

மகாராணி அழைத்ததன் பேரில் பீர்பால் விரைந்து சென்று பார்த்தார்.

பீர்பால் மகாராணியைப் பார்த்து, "மகாராணிக்கு என் பணிவார்ந்த வணக்கம். தாங்கள் என்னை அழைத்ததாகக் காவலர் கூறவும் நான் விரைந்தோடி வந்தேன். என்னால் தங்களுக்கு ஆக வேண்டிய உதவி ஏதேனும் உள்ளதா? கூறுங்கள் செய்கிறேன்" என்றார்.

உடனே மகாராணியார் பீர்பாலை நோக்கி "பீர்பால், நம் மன்னரைப் பற்றிய கவலைதான் எனக்கு. மன்னர் மிகவும் கோபப்படுகிறார். கோபம் அவருடைய உடம்புக்கு ஆகாது. அதை எப்படி மாற்றுவது என்பது குறித்து ஆலோசனை கேட்கவே உங்களை நான் அழைத்தேன்" என்றார்.

உடனே பீர்பால் மகாராணியாரைப் பார்த்து, "மகாராணியே, கோபப்படுவது உங்கள் உடம்புக்கு ஆகாது என்று மன்னரைப் பார்த்து நீங்கள் நேரடியாகக் கூறலாமே?" என்றார்.

அதற்கு மகாராணி பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், நானும் பலமுறை அவரிடம் நேரிலேயே கூறிவிட்டேன். அவரும் ஒரு நேரம்



tamilnavarasam.com

உணர்கிறார். அடுத்த நேரம் மறந்து விடுகிறார். தாங்கள் தான் ஏதாவது செய்து மன்னரின் கோபத்தை மாற்ற வேண்டும்'' என்றார்.

உடனே பீர்பால் மகாராணியைப் பார்த்து. ''மகாராணியே இனிமேல் இதற்காகத் தாங்கள் கவலைப்படாதீர்கள். அதற்கான சிறந்த வைத்தியத்தை மன்னருக்கு நான் கொடுக்கிறேன்'' என்று கூறிவிட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டார்.

ஒருநாள் வழக்கம்போல் அக்பர் தன் காலைக் கடன்களை முடித்து, குளித்து விட்டு இறைவனைத் தொழுது கொண்டிருந்தார்.

அக்பர் எப்பொழுதும் கண்களை மூடியபடி, மெய் உருகி வழிபடுவார். அப்பொழுது ஒரு அசரீரி குரல் கேட்டது.

''அரசே, நீங்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுவதால் கோபம் உங்களை ஆட்கொள்கிறது. நீங்கள் உங்கள் கோபத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும்'' என்றது அந்தக் குரல்.

பேரரசருக்கு பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. தெய்வம் தான் அசரீரியாகப் பேசுகிறது என எண்ணினார். மேலும், அந்தத் தெய்வம் என்ன கூறுகிறது எனக் கேட்பதற்காகத் தன் கண்களை மூடிக்கொண்டிருந்தார்.

''அரசே உங்களுக்கு முன் தங்கச் சொம்பு ஒன்றை வைத்துள்ளேன். உங்களுக்கு எப்பொழுதெல்லாம் கோபம் உண்டாகிறதோ அப்பொழுதெல்லாம் அந்தத் தங்கச் சொம்பிலிருந்து



குளிர்ந்த நீரை எடுத்துக் குடிப்பீரானால், உடனே உங்கள் கோபம் உங்களை விட்டுப் பறந்தோடி விடும்'' எனக் கட்டளையிட்டு குரல் மறைந்தது.

அக்பர் கண்விழித்தார். தனக்கு முன்னால் ஒரு புதிய தங்கச் சொம்பு இருப்பதைக் கண்டு எடுத்துப் பார்த்து மகிழ்ந்தார்.

தெய்வம் அசரீரியாகச் சொன்னபடியே தனக்குக் கோபம் வரும்போதெல்லாம் தண்ணீரைக் குடித்தார். இதனால் அரசரின் கோபம் படிப்படியாகக் குறைந்தது.

மன்னருக்கே தனது நிலை புரிந்தது. இதைக் கண்டு மகாராணியும், பீர்பாலும் பெரிதும் மகிழ்ந்தனர்.

அக்பர் மகாராணியையும், பீர்பாலையும் பார்த்து, ''பார்த்தீர்களா இப்பொழுதெல்லாம் என் கோபம் என்னை விட்டுப் பறந்தோடி விட்டது. இறைவனின் ஆசீர்வாதத்தால் எனக்குக் கிடைத்த தங்கச் சொம்புதான் இதற்குக் காரணம்'' என்றார்.

அரசரைப் பார்த்து மகாராணியும், பீர்பாலும் சிரித்தனர்.

உடனே அரசர் அவர்களைப் பார்த்து, ''ஏன் சிரிக்கிறீர்கள்? நான் உண்மையைத்தான் கூறினேன்'' என்றார்.

உடனே மகாராணியும், பீர்பாலும், மன்னரைப் பார்த்து ''உங்களை நினைத்தோம், சிரித்தோம்'' என்றனர்.



RangaRakes

tamilnavarasam.com

உடனே அரசர், "என்ன அது?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "மன்னா முதலில் தாங்கள் என்னை மன்னியுங்கள். தங்கச் சொம்பை வைத்து கடவுளின் அசரீரியாகப் பேசியது நான்தான்.

வெப்பம், குளிர்ச்சியால் தணிவது போல, கோபம் என்பதும் உடலை உஷ்ணப்படுத்தும் நெருப்புதான். அந்தக் கோபம் வரும்போது குளிர்ச்சியான தண்ணீரைப் பருகி விட்டால் அது தணிந்து விடும்.

தாங்கள் அடிக்கடி கோபப்படுகிறீர்கள் என்று மகாராணியார் என்னிடம் கூறிக் கவலைப்பட்டார். அதனால் உங்கள் உடல்நலம் கெடுவதை எண்ணி அவர் வேதனைப்பட்டார். உங்களை அந்தக் கோபத்திலிருந்து மீட்கவே உங்க முன் தங்கச் சொம்பை வைத்து, அதில் குளிர்ச்சியான நீரையும் நான் ஊற்றி வைத்தேன்" என்றார்.

உடனே மன்னர் மகாராணியாரையும், பீர்பாலையும் மனதாரப் பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

# 8. அக்பரின் தவறை உணர்த்திய பீர்பால்

ஒருநாள் வழக்கம்போல் பேரரசர் அக்பரும், பீர்பாலும் ஆற்றங்கரையோரம் பேசிக்கொண்டே வந்தனர். அது பனிக்காலம் என்பதால் குளிரும் கடுமையாக இருந்தது.

பேரரசரின் மனதில் ஒரு எண்ணம் பிறந்தது. அவர் உடனே பீர்பாலைப் பார்த்து,

"பீர்பால் இந்தப் பனியிலும், கடுமையான குளிரிலும் ஓர் இரவு முழுவதும், இந்த ஆற்று நீரில் நிற்க முடியுமா?" என்று கேட்டார்.

உடனே பீர்பால் அரசரைப் பார்த்து, 'மன்னா, என்னால் முடியாது. ஆளை விடுங்கள். நான் ஓடியே போய் விடுவேன்' என்றார்.


அக்பர் இச்செய்தியை மக்களிடம் தெரிவிக்குமாறு பீர்பாலிடம் கூறினார்.

பீர்பாலும் அவ்வாறே தெரிவித்து விட்டார்.

மிகவும் வறுமையில் வாடிய ஏழை ஒருவன், மன்னரின் பரிசைப் பெற்றால் குடும்பம் சிறக்கும் என எண்ணினான். எனவே, கடுங்குளிரையும் பனியையும் பொருட்படுத்தாமல் போட்டியில் கலந்து கொள்ள முடிவெடுத்து மன்னரின் முன் வந்து நின்றான்.



tamilnavarasam.com



மன்னரும், அவனை அன்றைய இரவு முழுவதும் குளிரில் ஆற்றுத் தண்ணீரில் நின்று வருமாறு கூறி அனுப்பினார், அவனைக் கண்காணிக்க இரண்டு காவலர்களையும் அனுப்பினார்.

அந்த ஏழை மனிதனும், இரவு முழுவதும் ஆற்றுக்குள் நின்றான். அவனைக் காவலர்களும் இரவு முழுவதும் கண்காணித்துக்கொண்டே இருந்தனர்.

காவலர்கள் காலையில் அவனை அழைத்து வந்து அரசர் முன் நிறுத்தினர். மன்னர் அந்தக் காவலர்களைப் பார்த்து "காவலர்களே, இவர் இரவு முழுவதும் ஆற்று நீரில் நின்றிருந்தாரா? " என்று கேட்டார்.

உடனே காவலர்கள், "ஆமாம் மன்னா" என்றனர்.

உடனே மன்னர் அந்த ஏழை மனிதரைப் பார்த்து "மனிதரே, உம்மைப் பாராட்டுகிறேன். இரவெல்லாம் எப்படி அந்தக் கடுங்குளிரைத் தாங்கிக் கொண்டு ஆற்று நீரில் நின்றிருந்தீர்?" என்று கேட்டார்.



RangaRakes

உடனே அந்த ஏழை மனிதன், மன்னரைப் பார்த்து, "அரசே, அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. இரவு முழுவதும் அரண்மனையில் தெரிந்த வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தேன்" என்றான்.

உடனே மன்னர் அவனைப் பார்த்து, "அப்படியென்றால் உனக்கு பரிசு இல்லை. நீ செல்லலாம்" என்றார்.

மன்னர் இப்படிக் கூறியதைக் கேட்ட அந்த ஏழை மனிதன் பெரிதும் வேதனையடைந்தான்.

உடனே அவன் அரசரைப் பார்த்து "பேரரசே, தாங்கள் இப்படிக் கூறலாமா? தாங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல் இருப்பது உங்களுக்கு அழகாகுமா?" என்றான்.

மன்னர் அவனைப் பார்த்து, "நீ இரவு முழுவதும் அரண்மனை விளக்கைப் பார்த்ததால், அதன் சூட்டில் குளிர்காய்ந்திருக்கிறீர். அதனால் உங்களுக்குப் பரிசு இல்லை. நீங்கள் போகலாம்" என்றார்.

பாவம் அந்த ஏழை மனிதனும் மேற்கொண்டு எதுவும் பேசாமல் வருந்தியபடியே சென்று விட்டான்.

காவலர்கள் அந்த ஏழை மனிதனுக்காக மனம் இரங்கினர். எப்படியும் அந்த மனிதருக்கு மன்னரின் பரிசுப் பணம் சேர வேண்டும் என நல்லெண்ணம் கொண்டனர்.



tamilnavarasam.com

அதற்காகச் சிறுதும் காலம் தாழ்த்தாமல், நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் பீர்பாலிடம் சென்று கூறினர். இனி தான் பார்த்துக் கொள்வதாக பீர்பால் வாக்களித்தார்.

அன்று காலையில் அரசர் தன் காவலர்களுடன் வேட்டைக்குக் கிளம்பத் தயாரானார். வழக்கம்போல் பீர்பாலையும் அழைத்துவர காவலர்களை அனுப்பினார்.

பீர்பால் வருவதற்குக் காலதாமதம் ஆனதால் மன்னர் தன் பரிவாரங்களுடன் காட்டுக்குப் புறப்பட்டார்.

காட்டுப்பகுதியில் மன்னர் அக்பர் சென்று கொண்டிருந்தார். வழியில் பீர்பாலைக் கண்டதும் சிரித்து விட்டார்.

ஏனென்றால், பீர்பால் வினோதமான செயலில் ஈடுபட்டிருந்தார்.

பீர்பால், வித்தியாசமான முறையில் சமையல் செய்து கொண்டிருந்தார். அடுப்பில் வைக்க வேண்டிய சோற்றுப் பானையை ஐந்தடி உயரத்தில் கட்டித் தொங்க விட்டிருந்தார். கீழே அடுப்பில் சில சிறிய குச்சிகள் மெதுவாக எரிந்து கொண்டிருந்தன.

அக்பர் பீர்பாலைப் பார்த்து, “என்ன பீர்பால் இங்கு அமர்ந்து என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, “வாருங்கள் மன்னா வணக்கம் , நான் இங்கு சமையல் செய்து கொண்டிருக்கிறேன்” என்றார்.



RangaRakes



மன்னரும், மற்றவர்களும் பீர்பாலைப் பார்த்து சிரித்தனர்.

உடனே பீர்பால் அவர்களைப் பார்த்து, “ஏன் சிரிக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

மன்னர் பீர்பாலைப் பார்த்து, “பீர்பால், அடுப்பு எங்கே இருக்கிறது, சோற்றுப்பானை எங்கே இருக்கிறது. அடுப்பிலிருந்து ஐந்தடி உயரத்தில் அல்லவா சோற்றுப்பானை இருக்கிறது. எப்படி அடுப்பில் இருந்து சூடு ஏறிச் சோறு வேகும்?” என்று கிண்டல் செய்தார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, “மன்னா நிச்சயம் சூடு ஏறி சோறு ஆக்கலாம் மன்னா, வெகு தொலைவில் இருக்கும் அரண்மனையின் விளக்கு ஒளியைப் பார்த்து ஒருவருக்குச் சூடு கிடைக்கும்பொழுது இது மட்டும் ஏன் முடியாது?” என்று கேட்டார்.

பேரரசர் தன் தவறை உணர்ந்தார். உடனே அந்த ஏழை மனிதரை வரவழைத்து அவருக்குப் பரிசுப் பணம் கொடுத்து அனுப்பினார். பீர்பாலையும் பாராட்டினார். பீர்பாலும் ஏழைக்குப் பரிசு கிடைத்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தார்.



tamilnavarasam.com

உடனே அதற்கு பீர்பால், ஆவன செய்கிறேன்'' என்றார்.

மேலும் சிறிது தூரம் நடந்தனர்.

ஓர் இளைஞன் விலை உயர்ந்த பட்டுப் போர்வையைப் போர்த்திக் கொண்டு வந்தான்.

அவன் திடீரென்று குனிந்து, தான் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி... பட்டுத்துணியால் துடைத்தான்.

இதைக் கண்ட மன்னர் வியந்தார்.

அவர் உடனே பீர்பாலை நோக்கி, ''என்ன பீர்பால்... இந்த இளைஞனுக்கு என்ன பைத்தியமா? விலை உயர்ந்த பட்டாடையால் அழுக்கு நிறைந்த செருப்பைத் துடைக்கிறான்'' என்று கேட்டார்.

உடனே ''பீர்பால், அரசே. இவனைப் பைத்தியம் என்று கூறாதீர்கள். ஏனென்றால், ஒவ்வொருவருக்கும் தாங்கள் வைத்திருக்கும் பொருளின் மதிப்பு தெரியும்'' என்றார்.

மன்னர் பீர்பாலைப் பார்த்து, ''என்ன சொல்கிறீர் பீர்பால்'' என்று கேட்டார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, ''அரசே, அவன் போர்த்தியிருக்கும் பட்டுப்போர்வை இலவசமாகக் கிடைத்திருக்கும்.



RangaRakes

அணிந்திருக்கும் செருப்பு தான் உழைத்த பணத்தில் வாங்கியிருப்பான். அதனால்தான் இவ்வாறு செய்கிறான்'' என்றார்.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து, ''பீர்பால் நீங்கள் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது'' என்றார். பீர்பால் மன்னரைப் பார்த்து, மன்னா இலவசமாகக் கிடைத்த ஒன்றை அதை வைத்திருப்பவர்கள் பெரிதான பொருளாக மதிக்க மாட்டார்கள். எங்கே அந்த மனிதரை அழைத்துக் கேட்டுப் பாருங்கள். இது உண்மையா என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என்றார்.

அக்பர் அந்த இளைஞனைக் கூப்பிட்டுக் கேட்டார். அவனும் அதைச் சரியென்றான்.

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து, ''பீர்பால், உங்கள் அறிவுக்கூர்மை என்னை வியக்கச் செய்கிறது'' என்று கூறிப் பாராட்டினார்.



tamilnavarasam.com

## 10. பாதி வெயில், பாதி நிழல்

ஒருமுறை அக்பருக்கும், பீர்பாலுக்கும் இடையே காரசாரமான விவாதம் நடந்தது. இதனால் பீர்பால் கோபித்துக்கொண்டு சென்று விட்டார்.

இதுபோல் இருவருக்குள்ளும் அடிக்கடி சண்டை ஏற்பட்டு சமாதானம் ஆவதும் உண்டு. அதுபோல்தான் அன்றும் பீர்பால் மன்னரிடம் கோபித்துக்கொண்டு சென்று விட்டார்.

பீர்பால் வெளியில் செல்லும்போது, அரசர் எவ்விதச் சமாதானமும் சொல்லவில்லை. ஏனென்றால் அவராகவே சமாதானம் ஆகித் திரும்பவும் வந்து தன்னைச் சந்திப்பார் என்றுதான் அரசர் நினைத்தார்.

ஆனால் பீர்பால், அரசரைச் சந்திக்க வரவே இல்லை. பீர்பால் வீட்டிற்கு ஆள்அனுப்பி, அழைத்து வர அரசர் கட்டளையிட்டார். ஆனால், பீர்பால் வீட்டில் இல்லை. நாட்டின் பல பகுதிகளில் தேடியும் பீர்பால் கிடைக்கவில்லை. மன்னர் மிகுந்த வேதனை அடைந்தார். எப்படியும் பீர்பாலைக் கொண்டு வந்தே ஆக வேண்டும் எனவும் முடிவு செய்தார்.

மறுநாள் வித்தியாசமான அறிவிப்பு ஒன்றை மன்னர்



RangaRakes

வெளியிட்டார். "பாதி வெயிலிலும், பாதி நிழலிலும் வருபவருக்குப் பரிசு வழங்கப்படும்" என்பதே அந்த அறிவிப்பாகும்.

யாருமே அப்படி வருவதாக இல்லை. மதிய நேரத்தில் ஒருவன் தன் தலையில் கட்டில் ஒன்றைச் சுமந்து கொண்டு அரண்மனைக்கு வந்தான். மன்னரின் அறிவிப்புப்படி, தான் வந்திருப்பதாக, மன்னருக்கு தெரிவிக்கும்படி கூறினான்.

காவலன் போய் மன்னரிடம் கூறியதும், மன்னர் அரண்மனை வாயிலுக்கு விரைந்து வந்தார்.

அங்கு ஒரு மனிதன் தன் தலையில் கயிற்றுக் கட்டிலுடன் நிற்பதைப் பார்த்தார்.

"அவன் மன்னரைப் பார்த்து மன்னருக்கு என் வணக்கம். மன்னா, தாங்கள் அறிவித்தபடியே பாதி வெயிலிலும், பாதி நிழலிலும் நான் வந்திருக்கிறேன்" என்றான்.

அரசரும் அவனுக்கும் பரிசுகள் தந்து பாராட்டி விட்டு, பிறகு அவனைப் பார்த்து, இந்த யோசனையை உனக்குச் சொல்லிக் கொடுத்த பீர்பால் எங்கே? என்று கேட்டார்.

அந்த மனிதனும் "பீர்பால் என் வீட்டில்தான் இருக்கிறார் அரசே" என்று உண்மையைக் கூறினான்.

அக்பர் அவனை அழைத்துக் கொண்டு பீர்பாலைச் சந்தித்தார்.



tamilnavarasam.com

அரசரைப் பார்த்ததும் பீர்பால் எழுந்து "வணக்கம் அரசே" என்றார்.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து, பீர்பால் உங்களுக்குத்தான் இத்தகைய புதிய யோசனை எல்லாம் தோன்றும். உங்களைக் கண்டுபிடித்து விட்டேன் பார்த்தீர்களா என்றார். அங்கிருந்த அனைவரும் சிரித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

## 11. ஓர் அறிஞரின் தாய்மொழி எது என்று கண்டுபிடித்த பீர்பால்

தலைசிறந்த அறிஞர் ஒருவர் பல நாடுகளுக்கும் சென்று, தன் திறமைகளைக் காட்டிப் பல்வேறு பரிசுகளை வென்றவர். அவர் ஒருநாள் அக்பரின் அரசவைக்கும் வந்தார். அரசவையில் இருந்தோர் அனைவருமே அந்த அறிஞரின் புலமையையும் திறமையையும் வியந்து பாராட்டினர்.

அந்த அறிஞர் பல மொழிகளை அறிந்தவர். யார் எந்த மொழியில் கேள்விகள் கேட்டாலும், அதே மொழியில் மிகவும் சரளமாகப் பதில் சொல்லக்கூடிய திறமையை அவர் பெற்றிருந்தார்.

பலமொழிகளைக் கற்றிருந்த பேரறிஞர் ஒருவர் தம் அரசவைக்கு வந்திருப்பதை எண்ணிப் பேரரசர் அக்பரும் பெருமையாகக் கருதினர். அவையில் இருந்த அனைவரும் தங்களுக்குத் தெரிந்த வரையில் அவரிடம் கேள்விகள் கேட்டு அவற்றுக்கான தெளிவான விடைகளையும் பெற்றனர். எனவே அந்த அறிஞரை அனைவருமே போற்றிப் புகழ்ந்தனர்.

அக்பர் அறிஞரைப் பார்த்து, "பேரறிஞரே, தாங்கள் சில நாள்கள் எங்கள் அரண்மனையில் தங்கியிருக்க வேண்டும். அதிகம் கற்ற தங்களை உபசரிப்பது எங்களது கடமை" என்றார்.



tamilnavarasam.com

மன்னர் பெரிதும் மகிழ்ந்தார்.

பிறகு மன்னர் அந்த அறிஞரை நோக்கி "பேரறிஞரே நீங்கள் யார்? எந்த மொழியில் கேள்விகள் கேட்டாலும் அதே மொழியில் மிகவும் சரளமாகவும், விளக்கமாகவும் உடனே பதில் அளிக்கிறீர்கள். உங்களுடைய தாய்மொழி எது எனத் தெரிந்துகொள்ள நான் ஆவலாக இருக்கிறேன்" என்றார்.

அரசர் இப்படி கேட்டதும் அந்த அறிஞர் 'கலகல'வெனச் சிரித்தார். பிறகு அவர் மன்னரைப் பார்த்து,

"மன்னா, கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, அதுபோல் தான் எனக்கும். நான் கற்ற மொழிகள் அனைத்துமே தாய்மொழிகள்தான்" என்றார்.

அறிஞர் கூறிய அந்தப் பதிலில் மன்னர் சமாதானம் அடையவில்லை. அவருடைய தாய்மொழி எது என்று அறிந்து கொள்வதில் அவர் ஆவலுடையவராய் இருந்தார்.

பிறகு மன்னர் அந்த அறிஞரைப் பார்த்து, "சரி, அறிஞரே தாங்கள் களைப்பாக இருக்கிறீர்கள். சிறிது நேரம் ஓய்வெடுங்கள்" என்று கூறிவிட்டு, அவரை விருந்தினர் மாளிகையில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு மன்னர் அங்கிருந்து விடை பெற்றார்.



RangaRakes

அன்றைய மாலைப்பொழுதில் அரசரும், பீர்பாலும் உலக நடப்புகள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த அறிஞரைப் பற்றிய பேச்சும் வந்தது.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், நம் அரண்மனையில் விருந்தினராகத் தங்கியிருக்கும் அறிஞர் பல மொழிகளைக் கற்றவராக இருக்கிறார் என்றாலும் அவருடைய தாய்மொழி எது எனக் கேட்டால் கூற மறுக்கிறாரே" என்றார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "மன்னா ஒவ்வொருவருக்குமே தாய்மொழி என்று ஒன்று இருக்கிறது. அது அவருடைய ஆழ்மனதில் எப்பொழுதும் நிறைந்திருக்கும். அந்த அறிஞரின் தாய்மொழி எது என்பதை இன்று இரவு கண்டுபிடித்து விடுவோம்" என்றார்.

இரவு அனைவரும் உறங்கிய பின்பு, அரசரும், பீர்பாலும் அந்த அறிஞர் உறங்கும் விருந்தினர் மாளிகைக்குச் சென்றனர்.

அந்த அறிஞர் மெய்மறந்து உறங்கிக் கொண்டிருந்தார். பீர்பால் சிறிதும் சப்தமில்லாமல் அந்த அறிஞரின் அருகில் வந்தார். அவர் பின்னாலேயே அரசரும் வந்து நின்றார்.

நன்றாக உறங்கிக் கொண்டிருந்த அறிஞர் முதுகில் பீர்பால் ஒரு தட்டு தட்டினார். பிறகு இருவரும் திரை மறைவில் நின்று கொண்டனர்.



tamilnavarasam.com

அடி விழுந்த வேகத்தில் எழுந்தார் அந்த அறிஞர். தூக்கக் கலக்கத்திலும், "யாரடா அவன்" எனத் தமிழில் கேட்டார். ஒருவரும் அருகில் இல்லை எனத் தெரிந்து மீண்டும் படுத்துத் தூங்கினார்.

அரசரும், பீர்பாலும் இப்பொழுது திரை மறைவிலிருந்து வெளியே வந்தனர். பிறகு பீர்பால் அக்பரைப் பார்த்து, "கேட்டீர்களா அரசே, அவர் தாய்மொழி தமிழில்தான் பேசினார்.

யாராக இருந்தாலும் அவசரத்தில் பேசும்பொழுது தாய்மொழியில் மட்டுமே பேசுவார்கள்" என்றார்.

மன்னர், பீர்பாலின் நுண்ணறிவை வியந்து பாராட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

## 12. ஆகாயத்தில் அரண்மனை

வழக்கம்போல் அக்பரும் பீர்பாலும் யமுனை நதிக்கரை ஓரம் உலக நடப்புகளைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது அக்பர் பீர்பாலைப் பார்த்து,

"பீர்பால்... பல்லாண்டுகளாக என் மனதில் ஓர் ஆசை இருந்து கொண்டே இருக்கிறது. அந்த ஆசை மற்றவர்களுக்கு இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. அதேபோல, அது நடக்கக் கூடியதா என்பது குறித்தும் எனக்குச் சந்தேகம் இருக்கிறது. இந்த ஆசையை நான் சொன்னால் நீங்கள் சிரிப்பீர்கள்" என்றார்.

பீர்பாலுக்கு ஆவல் அதிகமானது. அப்படி மன்னரின் மனதில் என்ன ஆசைதான் இருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற கருத்துடையவராய், அரசரைப் பார்த்து,

"மன்னா, என்ன ஆசை சொல்லுங்கள், நானும் தெரிந்து கொள்கிறேன்" என்றார்.

உடனே அரசர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், என் ஆசை என்ன என்பதை நீங்கள் தெரிந்து கொண்டால் என்னைக் கேலி செய்வீர்கள்" என்றார்.

உடனே பீர்பால், "விஷயத்தைக் கூறுங்கள் அரசே" என்றார்.



tamilnavarasam.com

மன்னர் பீர்பாலைப் பார்த்து, ''பீர்பால், ஆகாயத்தில் அரண்மனை கட்ட வேண்டும். இதுதான் என் ஆசை'' என்றார்.

மீண்டும் அரசர் பீர்பாலைப் பார்த்து ''என்ன பீர்பால். நான் சொன்னது பைத்தியக்காரத்தனமாக இருக்கிறதா?'' என்று கேட்டார்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, ''இதில் எந்தப் பைத்தியக்காரத்தனமும் இல்லை. நீங்கள் நினைத்தால் ஆகாயத்தில் அரண்மனை கட்டலாம்'' என்றார்.

அது நடைபெறாத ஆசை என்று பீர்பால் அறிந்திருந்தும், உடனே தன் கருத்தைக் கூறினால் மன்னர் கோபப்படுவார் என்ற காரணத்தால் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

உடனே அரசர் உற்சாகமானார். அவர் பீர்பாலைப் பார்த்து, ''பீர்பால், உங்களால் அதைக் கட்ட முடியுமா?'' என்று கேட்டார்.

பீர்பால் அரசரைப் பார்த்து, ''நிச்சயம் கட்ட முடியும். அதற்கு எனக்கு ஒரு இலட்சம் பொற்காசுகளும், ஆறுமாத கால அவகாசமும் வேண்டும் அரசே'' என்றார்.

அரசர் பீர்பாலைப் பார்த்து, ''பீர்பால் உங்களுக்கு வேண்டிய பொற்காசுகளை வாங்கிக் கொள்ளுங்கள். எனக்கு ஆகாயத்தில் அரண்மனை கட்ட வேண்டும். அவ்வளவுதான்'' என்றார்.



RangaRakes



அக்பரிடம் விடை பெற்று தன் வீட்டுக்குத் திரும்பினார் பீர்பால்.

மறுநாள் பொக்கிஷத்தில் ஒரு இலட்சம் பொற்காசுகளைப் பெற்றுக் கொண்டு வீடு வந்த பீர்பால், தன் உதவியாளரிடம் இரண்டு வேடர்களை அழைத்து வரும்படி கூறினார்.

உதவியாளர், இரண்டு வேடர்களை அழைத்து வந்தார்.

பீர்பாலைப் பார்த்ததும் இரண்டு வேடர்களும் தங்களின் வணக்கங்களைத் தெரிவித்தனர்.

பீர்பால் அவர்களைப் பார்த்து, ''வேடர்களே, ஒரு வாரத்தில் எனக்கு நூறு கிளிகளைப் பிடித்து கொண்டு வர வேண்டும்'' என்றார்.

அவர்களும் ''சரி'' என்றனர்

பீர்பால் தான் வைத்திருந்த ஒரு இலட்சம் பொற்காசுகளில் இருநூறு பொற்காசுகளை எடுத்து அவர்களிடம் வழங்கினார்.



tamilnavarasam.com

வேடர்களும், அந்தப் பொற்காசுகளை மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு ஒரு வாரத்தில் நூறு கிளிகளைப் பிடித்துக் கொண்டு வந்து பீர்பாலிடம் கொடுத்தனர்.

பீர்பால் தகுந்த பயிற்சியாளர்களைக் கொண்டு அந்த கிளிகளுக்கு செங்கல் எடுத்து வா, சுண்ணாம்பு கொண்டு வா, சாந்து கொண்டு வா, போன்ற சொற்களை கற்றுக் கொடுக்க உத்தரவிட்டார். அவர்களும் அவ்வாறே பயிற்சி அளித்தனர். சில நாள்களில் கிளிகளும் அந்தச் சொற்களைப் பேச கற்றுக் கொண்டன.

பீர்பால், தான் வைத்திருந்த பொற்காசுகளில் சிலவற்றை அந்தக் கிளிகளுக்குப் பயிற்சி அளித்தவர்களுக்கு வழங்கினார்.

நாள்கள் கடந்தன.

மாலை நேரம்

அக்பர் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தார். அப்போது பீர்பால் அங்குச் சென்று, வணக்கம் மன்னா, என்றார்.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து,

"வாருங்கள் பீர்பால், ஆகாயத்தில் அரண்மனை கட்டும் பணியைத் தாங்கள் எப்பொழுது தொடங்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.



RangaRakes

அக்பர் மிகுந்த ஆவலுடன் இருந்தார்.

உடனே பீர்பால் அக்பரை நோக்கி,

"அரசே அரண்மனையில் மிகப்பெரிய அறை ஒன்று எனக்குத் தேவைப்படுகிறது. ஆகாயத்தில் கட்டப்போகும் அரண்மனை நிர்மாணிப்பதற்கு, கட்டுவதற்கு வேண்டிய மண், செங்கல்,

சுண்ணாம்பு ஆகியவற்றை அங்குச் சேர்த்து வைக்க வேண்டும்" என்றார்.

உடனே மன்னர் பீர்பாலை நோக்கி, "மிகப்பெரிய அறைதானே... அரண்மனையில் போர்க்கருவிகள் வைப்பதற்கான அறை இருக்கிறது. அதைச் சுத்தம் செய்து தரச் சொல்கிறேன், அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்றார்.

உடனே பீர்பால் அரசரைப் பார்த்து, "நன்றி மன்னா, கட்டிட வேலை ஆரம்பிக்கும்போது தங்களை அழைக்கிறேன். வந்து பாருங்கள்" என்றார்.

அரசரும் "சரி" என்றார்.

மறுநாள் அறையைச் சுத்தம் செய்து, அந்த அறையில் கிளிகளைக் கொண்டு வந்து விட்டார் பீர்பால்.

நூறு கிளிகளும் செங்கல் கொண்டு வா, மண் கொண்டு வா, சுண்ணாம்பு கொண்டு வா, சாந்து கொண்டு வா, தண்ணீர்



tamilnavarasam.com

கொண்டு வா, என்று பேசிக்கொண்டே அறையில் நாலா பக்கங்களிலும் பறந்தன.

பீர்பால் அரசரை அழைத்தார்.

அங்கு வந்த அரசர், ஏராளமான கிளிகள், அங்குமிங்கும் பறப்பதைக் கண்டு திகைத்து, பீர்பாலை நோக்கி,

"என்ன பீர்பால், எதற்காக இத்தனை கிளிகளைக் கொண்டு வந்து இந்த அறையில் அடைத்து வைத்திருக்கிறீர்கள்? என்று கேட்டார்."

உடனே பீர்பால் அரசரைப் பார்த்து, "அரசே, கிளிகள் பேசுவதை உற்றுக் கேளுங்கள்" என்றார்.

கிளிகள் பேசுவதைக் கவனித்த மன்னர், பீர்பாலை நோக்கி,

"என்ன பீர்பால் இச்செயல் பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது. சாதாரண கிளிகளால் செங்கல்களையும், மண்ணையும், தண்ணீரையும், சுண்ணாம்பையும் சுமந்து வர முடியுமா என்ன உளறல் இது?" என்று கோபமாகக் கேட்டார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து,

"மன்னா... தாங்கள் அஸ்திவாரம் இல்லாமல் ஆகாயத்தில் அரண்மனை கட்ட முயற்சி செய்யும்போது அதற்கு தேவையான



RangaRakes

கட்டுமானப் பொருள்களைக் கிளிகளைக் கொண்டு என்னால் கொண்டு வர முடியாதா என்ன?" என்று கேட்டார்.

அக்பருக்கு பீர்பால் தனக்கு என்ன சொல்ல வருகிறார் என்பது புரிந்து விட்டது. ஆகாயத்தில் அரண்மனை கட்ட முடியாது என்று நேரில் கூறினால் அரசர் கோபப்படுவார். அதை பறவைகள் மூலம் சொன்னால் புரிந்து கொள்வார் என்றுதான் இவ்வாறான ஏற்பாட்டை செய்திருக்கிறார் பீர்பால்.

உடனே அக்பர் பீர்பாலை நோக்கி,

"பீர்பால், நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்பதை நான்புரிந்து கொண்டேன். ஆகாயத்தில் அரண்மனை கட்ட முயலுவது பைத்தியக்காரத்தனம் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டேன்."

பாவம் அந்தக் கிளிகள். அவைகளை விட்டு விடுங்கள் என்று கூறிவிட்டு அரண்மனையை நோக்கி நடந்தார் அக்பர்.



tamilnavarasam.com

## 13. சரியான தீர்ப்பு வழங்கிய பீர்பால்

வியாபாரி ஒருவர் தன் வேலையை முடித்துக் கொண்டு, தன்னுடைய வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். சற்று நேரம் இளைப்பாறலாம் என்று எண்ணிய அவர், ஒரு மரத்தில் தன் குதிரையைக் கட்டினார்.

பின்னர் குளத்தில் இறங்கி, நீராடி விட்டு எழுந்தார். அப்போது மற்றொரு வழிப்போக்கன் தன் கழுதைகளுடன் அங்கு வந்தான். அவன் தன் கழுதையை, குதிரை அருகே கட்டிவிட்டு இளைப்பாறலாம் என எண்ணி குதிரை பக்கம் சென்றான்.

அப்பொழுது வியாபாரி அந்த வழிப்போக்கனைப் பார்த்து ஐயா, என் குதிரையின் அருகில் உங்கள் கழுதையைக் கட்டாதீர்கள்'' என்றார்.

உடனே அந்த வழிப்போக்கன் வியாபாரியைப் பார்த்து, ``ஏன்? உங்கள் குதிரைக்கு அருகில் என் கழுதையைக் கட்டினால் என்ன?'' என்று கேட்டார்.

உடனே அந்த வியாபாரி வழிப்போக்கனைப் பார்த்து, ``குதிரை மிகவும் மோசமானது. உன் கழுதையை உதைத்துத் தள்ளிவிடும். அதனால்தான் சொல்கிறேன்'' என்றார்.



RangaRakes

உடனே அந்த வழிப்போக்கன் வியாபாரியைப் பார்த்து, ``அதையும் பார்த்து விடுவோம். உம் குதிரை என்ன முரட்டுக் குதிரையா என்ன'' என்றபடி, தன் கழுதையை குதிரையின் அருகிலேயே கட்டினான்.

உடனே வியாபாரி அந்த வழிப்போக்கனைப் பார்த்து ``உனக்கெல்லாம் சொன்னால் புரியாது. அனுபவப்பட்டால்தான் புரியும்'' என்றான்.

குதிரை தன் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த கழுதையை ஓங்கி உதைத்தது. அந்தக் கழுதை வலி தாங்காமல் மயக்கமடைந்து விழுந்து விட்டது.

உடனே வழிப்போக்கன் பதறியபடி ஓடி வந்து, வியாபாரியைப் பார்த்து, ``உன் குதிரை உதைத்ததால் என் கழுதை இறந்து விட்டது. ஆகவே, கழுதைக்குரிய விலையை நீ தர வேண்டும்'' எனக் கத்தினார்.

உடனே வியாபாரி, ``அதெல்லாம் முடியாது. நான்தான் முன்பே கூறினேனே. என் சொல்லையும் மீறி, நீங்கள் கழுதையை என் குதிரையின் அருகில் கட்டியதால்தான் இப்படி நடந்தது'' என்றார்.

உடனே அந்த வழிப்போக்கன் வியாபாரியைப் பார்த்து ``அதெல்லாம் நான் ஏற்க மாட்டேன். வா மன்னரிடம்



tamilnavarasam.com

முறையிடுவோம்'' என அவரை அழைத்தார். வியாபாரியும் வேறு வழியின்றி மன்னரிடம் வந்தார்.

மன்னர் இவர்களை நன்கு விசாரித்து சரியான தீர்ப்பு வழங்கும் பொறுப்பை பீர்பாலிடம் ஒப்படைத்தார்.

பீர்பால் அந்த இருவரையும் அழைத்து விசாரித்தார். பீர்பால் முதலில் வியாபாரியிடம், ''இந்த வழிப்போக்கன் உங்கள் மீது கூறும் குற்றச்சாட்டு உண்மையானதுதானே'' என்று கேட்டார்.

அதற்கு வியாபாரி, பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார்.

உடனே வழிப்போக்கன் பீர்பாலைப் பார்த்து, ''ஐயா இவர் குதிரை உதைத்துதான் என் கழுதை இறந்துவிட்டது. எனவே கழுதைக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை தாங்கள்தான் தயவு செய்து இவரிடமிருந்து வாங்கித் தர வேண்டும்'' என்றார்.

பீர்பால் மீண்டும் வியாபாரியைப் பார்த்து, ''இந்த வழிப்போக்கன் உங்கள் மீது குற்றம் சாட்டுவது உண்மைதானே?'' என எச்சரிக்கும் விதமாகக் கேட்டார்.

அப்பொழுதும் வியாபாரி, பதில் ஏதும் கூறாமல் அமைதியாகவே நின்றிருந்தார்.



RangaRakes

வழிப்போக்கனுக்கு கோபம் வந்து விட்டது. அவர் பீர்பாலைப் பார்த்து, ''ஐயா, தாங்கள் என்ன கேட்டும் பதில் கூறாமல் இருக்கிறார் பாருங்கள். என் கழுதையை குதிரையின் பக்கத்தில் கட்டும்பொழுது, அங்குக் கட்டாதே. என் குதிரை முரட்டுத்தனமானது உதைக்கும். வேறு இடத்தில் கட்டுங்கள் என அலறினார். ஆனால் இப்பொழுது மட்டும் பேசத் தெரியாத ஊமைபோல் இருக்கிறார் பாருங்கள். என்ன கொழுப்பு இவருக்கு'' என்றார்.

உடனே பீர்பால், ''சரி, உங்கள் வழக்கு முடிந்து விட்டது. கவலையை விடுங்கள்'' என்றார்.

உடனே வழிப்போக்கன் பீர்பாலை ஆச்சரியமாகப் பார்த்து, ''என்ன ஐயா சொல்கிறீர்கள். தாங்கள் தீர்ப்பு சொல்லாமலேயே வழக்கு முடிந்து விட்டதாகக் கூறுகிறீர்கள்'' என்றார்.

உடனே பீர்பால் வழிப்போக்கனைப் பார்த்து, ''வழக்கின் உண்மையைத்தான் தாங்கள் கூறி விட்டீர்களே'' என்றார்.

அதற்கு அந்த வழிப்போக்கன் ''எப்படி ஐயா?'' என்று கேட்டார்.

உடனே பீர்பால் அந்த வழிப்போக்கனைப் பார்த்து, ''அந்தக் குதிரையின் அருகில் உங்கள் கழுதையைக் கட்டாதீர்கள், அது உதைக்கும் என்று வியாபாரி கூறியும், மீறி கட்டியது உங்கள் தவறுதானே? தவறை நீங்கள் செய்து விட்டுப் பழியை அவர்மீது



tamilnavarasam.com

சுமத்துவது பெரிய குற்றம் ஆகும். எனவே, இதனால் அவருடைய மனம் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கும். எனவே, நீங்கள் அவருக்கு நூறு பணம் அபராதத் தொகை செலுத்த வேண்டும்'' எனத் தீர்ப்பளித்தார்.

உடனே வியாபாரி பீர்பாலைப் பார்த்து, ''மிகவும் நன்றி ஐயா'' எனக் கூறி மகிழ்ச்சியாக அங்கிருந்து கிளம்பினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

## 14. சகுனம் பார்ப்பது மூடப்பழக்கமே

வழக்கம்போல் அக்பரும், பீர்பாலும் பேசிக் கொண்டிருந்தனர். உலக நடப்புகளைப் பற்றிப் பேசி முடித்தபின் அவர்களுடைய பேச்சு சகுனம் பார்ப்பது பற்றி திரும்பியது.

அக்பர் பீர்பாலைப் பார்த்து, ''சகுனம் பார்ப்பது பற்றி தங்களுடைய கருத்து என்ன?'' என்று கேட்டார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, ''பேரரசே, எந்தச் செயலும் அவரவர் எண்ணப்படியேதான் நடக்குமே தவிர சகுனம் பார்த்துச் செயல் செய்வதை நான் வெறுக்கிறேன்'' என்றார்.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து, ''அப்படி ஒரேடியாகச்

சொல்லிவிட முடியாது பீர்பால், சகுனம் என்பதை அனுபவத்தில் உணர்ந்துதான் அறிய முடியும்'' என்றார்.

அரசர், சரி இந்தப் பிரச்சனையை அவ்வளவு எளிதில் விடமாட்டார் போலிருக்கிறது என்று பீர்பால் முடிவெடுத்தார்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து ''சகுனம் பார்ப்பது உங்கள் எண்ணப்படி உண்மைதான் என வைத்துக்கொள்வோம். இது பற்றி மேலும் விவாதிக்க என்னா!ல் முடியாது'' என்று கூறினார்.



tamilnavarasam.com

உடனே மன்னர் பீர்பாலிடம், "நீங்கள் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்" என்றார்.

உடனே பீர்பால், "சொல்லுங்கள் அரசரே, செய்கிறேன்" என்றார்.

"நான் ஒரு ஆய்வு செய்யப் போகிறேன். மனிதர்களுக்கிடையில் ஒருவரைப் பார்த்தால் அபசகுனம் என்கிறார்கள் அல்லவா? அது உண்மைதானா என நான் கண்டறியப்போகிறேன். மக்கள் பேசும் அப்படிப்பட்ட மனிதர் ஒருவரை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்" என்றார்.

"அப்படியே ஆகட்டும் அரசே" என்ற பீர்பால் மன்னரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றார்.

மறுநாள் அரசர் கேட்டுக் கொண்டபடி அரண்மனைக்கு ஒருவரை பீர்பால் அனுப்பினார். அரசரும் அவரிடம் அனைத்து விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

சரி, இவரை வைத்தே நம் சோதனையை நடத்தலாம் என்ற முடிவுக்கும் வந்தார். அந்த மனிதருக்குத் தம் அரண்மனையிலேயே காவலர் வேலை கொடுத்தார். அன்று இரவு முழுவதும் அந்த மனிதரை, காவல் காக்கும் பணியில் நிறுத்தினார்.

அந்த மனிதரும் சற்றும் உறங்காமல் காவல் இருந்தார்.



RangaRakes

மறுநாள் பீர்பால் அரசரைக் காண அரண்மனைக்குச் சென்றார். மன்னர் தம் கையில் கட்டுடன் அமர்ந்திருந்தார்.

"பேரரசருக்கு என் பணிவான வணக்கம்" என்றார் பீர்பால்.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து, "வாருங்கள் பீர்பால், என் நிலையைப் பார்த்தீர்களா?" என்றார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "அரசே, தங்களுக்கு என்ன ஆனது? ஏன் கையில் கட்டு போட்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

உடனே அக்பர் "அதிகாலை எழுந்து குளிக்கச் சென்றேன், கீழே வழுக்கி விழுந்து விட்டேன். கையில் பலத்த அடிபட்டு விட்டது. அதனால்தான் கையில் கட்டு போட்டிருக்கிறேன்" என்றார்.

உடனே பீர்பால் மன்னரிடம் "பார்த்துச் சென்றிருக்க வேண்டும் மன்னா" என்றார்.

உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து, "அதெல்லாம் பார்த்து எச்சரிக்கையாகத்தான் சென்றேன். நீங்கள் நேற்று இங்கு அனுப்பிய அபசகுனம் பிடித்தவனைப் பார்த்துச் சென்றதால்தான் நான் வழுக்கி விழுந்தேன்" என்றார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "மன்னா, இப்பொழுது அந்த மனிதன் எங்கே?" என்று கேட்டார்.



tamilnavarasam.com

உடனே மன்னர் பீர்பாலை பார்த்து, "இப்படிப்பட்ட அபசகுணம் பிடித்தவன் இனிமேலும் நாட்டில் நடமாடக் கூடாது என எண்ணி அவனைச் சிறையில் அடைத்து விட்டேன். விரைவில் அவன் தலையைத் துண்டிக்கவும் போகிறேன்" என்று கோபமாகக் கூறினார்.

அந்த எளிய மனிதன் ஒரு பாவமும் அறியாதவன் என மனதில் எண்ணிய பீர்பால், அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என நினைத்தவராய், மன்னரைப் பார்த்து,

"மன்னா, பாவம் அந்த எளிய மனிதன்" என்றார். உடனே மன்னர் பீர்பாலைப் பார்த்து "என்ன கூறுகிறீர்கள் " என்று முறைத்தார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "பேரரசரே, நீங்கள் ஒன்றை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவன் முகத்தில் நீங்கள் விழித்ததாலா உங்களுக்கு இந்த அளவிற்கு அடிப்பட்டது?" என்றார்.

உடனே மன்னர் "ஆமாம்" என்றார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "அவன் உங்கள் முகத்தில் விழித்ததற்காக அவனுக்கு சிறைத்தண்டனையும், மரணத்தண்டனையுமா? இது நியாயமா? இது மக்களுக்குத் தெரிந்தால் உங்களையல்லவா தவறாக நினைப்பார்கள்?" என்றார்.



RangaRakes

உடனே மன்னர் அறிவுத் தெளிவு பெற்றார். அவர் பீர்பாலைப் பார்த்து, "ஆமாம் பீர்பால், தாங்கள் கூறுவது உண்மைதான். நான் கவனமுடன் நடக்காமல் விழுந்து காயம் ஏற்படுத்திக் கொண்டதற்கு பாவம், அந்த எளிய மனிதன் எவ்விதத்தில் பொறுப்பாளி ஆவான்? அவனை விடுதலை செய்கிறேன். சகுனம் பார்ப்பது மூடப்பழக்கமே என நான் தெரிந்து கொண்டேன். இனிமேல் சகுனம் பார்க்க மாட்டேன்" என்றார்.

உடனே பீர்பால், "இப்பொழுதுதான் என் மனம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறது மன்னா" என்றார்.

அக்பர் பீர்பாலைப் பாராட்டிப் பரிசுகள் பலவும் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



tamilnavarasam.com

# 15. அதிகமாக உணவு தின்றும் எடை குறைந்த ஆடு

காபூல் மன்னர் அக்பரின் நெருங்கிய நண்பர். அக்பர் அரசவையில் இருப்பவர்களையெல்லாம் அறிவாளிகளா எனச் சோதிக்க அவர் ஒரு ஆட்டை அனுப்பி, அதற்கு ஒரு மாதம் தொடர்ந்து நாள்தோறும் வயிறு முட்ட உணவு கொடுக்க வேண்டும். ஆனால் அந்த உணவை உண்ட ஆடு உடல் எடை ஏறாமல் குறைய வேண்டும் என்று ஒரு ஓலைச்சுருளில் எழுதி, தன் காவலன் ஒருவன் மூலம் அதனை அக்பரிடம் கொடுக்கச் சொல்லி அனுப்பியிருந்தான்.

காபூல் மன்னரின் ஓலைச்சுருளையும், அவர் கொடுத்தனுப்பிய ஆட்டையும் காவலன் அக்பரிடம் கொடுத்தான்.

அக்பர் அந்த ஆட்டை வாங்கிக் கொண்டு, ஓலைச்சுருளைப் பிரித்துப் படித்து அதிர்ச்சி அடைந்தார்.

இதென்னடா புதிய சோதனை என்று அவர் மனதில் எண்ணிக்கொண்டு விவரத்தை அவையினரிடம் கூறினார்.

உடனே பீர்பால் எழுந்து, "பேரரசே, அந்த ஆட்டை என்னிடம் கொடுங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன் என்றவர், காவலாளி ஒருவனைக் கூப்பிட்டு, "இந்த ஆட்டிற்கு காலையிலும், மாலையிலும் வயிறுமுட்ட, முட்ட உணவு கொடு" என்று கூறி அனுப்பி வைத்தார்.



RangaRakes



"ஒரு மாதம் சென்றதும் ஆட்டின் எடை குறைந்திருக்கும்படி அழைத்து வருகிறேன்" என்று அங்கிருந்தோர் அனைவரிடமும் கூறி அங்கிருந்து கிளம்பினார் பீர்பால்.

"இது அவ்வளவு எளிதாக நடக்கும் செயல் அன்று. காலை மாலை வயிறு முட்ட, முட்ட உண்ணும் ஆடு, யானையாகப் இருக்குமே தவிர, இளைக்காது" என்று அரசவை உறுப்பினருள் ஒருவர் கூற, சிலர் சிரித்தனர்.

காலம் கடந்தது.

பீர்பால் குறிப்பிட்ட நாளும் வந்தது.



tamilnavarasam.com

அரசவையில் அனைத்து உறுப்பினர்களும் கூடியிருந்தனர். பேரரசர் அக்பர் அரியணையில் கம்பீரமாக அமர்ந்திருந்தார்.

அக்பர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால்... எங்கே அந்த ஆடு"? என்று மன்னர் அவரைப் பார்த்து கேட்டார்.

பீர்பால் தன் இருக்கையை விட்டு எழுந்து அரசவையை விட்டு வெளியே சென்றவர், சிறிது நேரத்தில் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கும் ஆட்டை இழுத்து வந்தார்.

அரசவை உறுப்பினர்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. நாள்தோறும் இரண்டு வேளை வயிறு முட்டத்தின்ற ஆடா இப்படி இருக்கிறது? என்று மூக்கின்மேல் விரல் வைத்தனர்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து, "பேரரசே, இது காபூல் மன்னர் அனுப்பிய ஆடு. இரண்டு வேளையும் வயிறு நிறைய உணவு கொடுத்தும், மெலிந்தே காணப்படுகிறது." என்றார்.

உடனே அரசர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், என்ன வியப்பாக இருக்கிறதே... வயிறு முட்ட உணவு உண்டும். இந்த ஆடு இவ்வளவு மெலிந்து இருக்கிறதே... நீங்கள் என்ன செய்தீர்கள்? கூறுங்கள்?" என்றார்.

உடனே பீர்பால் மன்னரைப் பார்த்து,



RangaRakes

"மன்னா, இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை, காவலாளி நாள்தோறும் இரண்டுவேளை வயிறார உணவு கொடுத்தான். ஆடும் நன்கு தின்றது. தின்ற உடனே அதை ஒரு பெரிய நரியின் எதிரில் கட்டிப் போடச் சொன்னேன். கட்டிப்போட்டான். தன்னை அந்த நரியானது கொன்று தின்றுவிடுமோ என்ற பயத்திலேயே, அது தின்ற உணவெல்லாம் செரித்து விட்டது. அது மெலிந்தே காணப்படுவதற்கு இதுதான் காரணம்" என்றார்.

உடனே அரசர் பீர்பாலைப் பார்த்து, "பீர்பால், உமது அறிவுத்திறன் பாராட்டத்தக்கது" என்று கூறி, பல பரிசுகளைப் பீர்பாலுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.



tamilnavarasam.com

## 16. அக்பர் பிறைநிலவு போன்றவர்

ஒருநாள் அக்பர், பீர்பாலையும் அவரது நவரத்தினங்களுள் ஒருவரான "அபுல்பசலையும்" தன்னுடைய அறைக்கு அழைத்தார்.

இருவரும் அரசரின் அறைக்குள் நுழைந்தனர். அக்பர் அவ்விருவரையும் பார்த்து "அறிவில் சிறந்த அமைச்சர்களே... நீங்கள் இருவரும் எனது நண்பரான ஆப்கானிஸ்தான் அரசரைச் சந்தித்து, அவரிடம் நான் நலமாக இருக்கிறேன். என்று சொல்லி விட்டு வாருங்கள்" என்றார்.

அமைச்சர்கள் இருவரும் மன்னரைப் பார்த்து, "நல்லது அரசே, அவ்வாறே சொல்லி வருகிறோம்" என்று கூறி விட்டு அக்பரிடம் விடை பெற்றுச் சென்றனர்.

பத்து நாள்களில் இருவரும் ஆப்கானிஸ்தான் நாட்டின் அரண்மனையை அடைந்தனர்.

அது மிகப்பெரிய அரண்மனை.

அரண்மனைக் காவலன், அவர்கள் இருவரையும் அரசரின் தனியறைக்குள் அழைத்துச் சென்றான்.

இருவரும் அரசருக்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்து விட்டு அமர்ந்தனர்.



RangaRakes

பேரரசர் அக்பரின் உடல்நலனையும், நாட்டு மக்கள் நலனையும் மிகவும் ஆர்வமாக விசாரித்தார். ஆப்கானிஸ்தான் அரசர். "அனைவரும் நலம்" என்றனர் இருவரும்.

அப்பொழுது பீர்பால் ஆப்கானிஸ்தான் மன்னரைப் பார்த்து, "மன்னா... உங்கள் ஆட்சி முழுநிலவைப் போல் திகழ்கிறது. எங்கள் மன்னரின் ஆட்சி பிறைநிலவு போல் இருக்கிறது" என்றார்.

பீர்பாலின் பாராட்டைக் கேட்டு அபுல்பசல் அவர்மீது கோபம் கொண்டார்.

"தனக்கு அத்தனை நலன்களையும் செய்து கொடுத்து, சுகமாக வாழ வைக்கும் அரசரைப் பிறைநிலவு என்று கூறும் பீர்பாலுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்? திரும்ப என்னுடன்தானே வருவார். அப்போது பேரரசர் அக்பரிடம் கூறலாம் என்று தனக்குள் கூறிக் கொண்டார்". அபுல்பசல்.

ஆப்கானிஸ்தான் அரசர் இருவருக்கும் சிறந்த பரிசுகளை வழங்கி அனுப்பி வைத்தார்.

பத்து நாள்கள் பயணம் செய்த பின்பு இருவரும் தங்கள் நாட்டை வந்து அடைந்தனர்.

பேரரசர் அக்பர், இருவரையும் அன்புடன் வரவேற்றார். பிறகு அவர் இருவரையும் பார்த்து,



tamilnavarasam.com

“ஆப்கான் பயணம் எப்படி இருந்தது”? என்று கேட்டார். உடனே இருவரும் “மகிழ்ச்சியான பயணம் தான் மன்னா” என்று பதில் கூறினர்.

அபுல்பசல் மன்னரைப் பார்த்து, “மன்னா, பீர்பால் தங்களை ஆப்கான் மன்னரிடம் தாழ்வாகப் பேசியதை என் இரு செவிகளால் கேட்டேன்” என்றார்.

உடனே அரசர் கோபத்துடன் பீர்பாலைப் பார்த்து, “என்ன பீர்பால்... என்னைப் பற்றி... ஆப்கானிய மன்னரிடம் என்ன பேசினீர்?” என்று கேட்டார்.

உடனே பீர்பால் பயந்து, “மாமன்னரே... என்னை வாழவைக்கும் தெய்வமான உங்களைப் பற்றி நான் தரக்குறைவாகப் பேசுவேனா?” என்று கவலையுடன் கேட்டார்.

உடனே அக்பர் அபுல்பசலைப் பார்த்து, “அபுல்பசல் ஆப்கான் மன்னரிடம் பீர்பால் என்னைப் பற்றி என்ன கூறினார் என்பதைச் சொல்லுங்கள்” என்றார்.

உடனே அபுல்பசல் அக்பரைப் பார்த்து, “மன்னா தாங்கள் பிறை நிலவாம். ஆப்கான் மன்னர் முழுநிலவாம்” என்று பீர்பால் கூறினார் என்றார்.



RangaRakes

உடனே அக்பர் பீர்பாலைப் பார்த்து, “என்ன பீர்பால், தாங்கள் என்னைப் பிறைநிலவு என்று சொன்னது உண்மையா?” என்று கேட்டார்.

அதற்கு பீர்பால் அக்பரைப் பார்த்து, “அரசே, நான் தங்களை பிறைநிலவு என்று சொன்னது உண்மை. ஆனால் நான் என்ன அர்த்தத்தில் அங்கு அப்படி கூறினேன் என்பதைக் கேளுங்கள். ஆப்கான் மன்னர் முழு நிலவு, அதாவது இனி வளர்ச்சி இல்லாதவர். ஆனால் எமது மன்னர் பிறைநிலவு. வளர்ந்து வருபவர். முடிந்தது முக்கியமா? வளர்வது முக்கியமா?” என்று பீர்பால் கேள்வி கேட்க.

உடனே அக்பர், “வளர்வதுதான் முக்கியம். என்னைப் பற்றிச் சரியாகத் தான் சொல்லியிருக்கிறீர்கள் பீர்பால்” என்று கூறி அக்பர் பீர்பாலைப் பாராட்டினார்.

பிறகு அக்பர் அபுல்பசலைக் கோபமுடன் பார்த்தார். அவர் ஏதும் பேசாமல் மௌனமாக நின்றிருந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



tamilnavarasam.com

## 17. வேப்பமரமே சாட்சி

வயதான கிழவர் ஒருவர் பல புண்ணியத் தலங்களுக்கெல்லாம் சென்று, கடவுளை தரிசிக்க விரும்பினார். அவரிடம் பத்தாயிரம் பொற்காசுகள் இருந்தன. பல தலங்களுக்கும் சென்று வரும்வரை, இந்தப் பொற்காசுகளைப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்று எண்ணினார்.

கையில் பொன்முடிப்பை வைத்துக்கொண்டு இது பற்றி சிந்தித்துக் கொண்டே நடந்து கொண்டு இருந்தார். அப்பொழுது அவருடைய நண்பர் சிவராமன் என்பவர் அந்த வழியாக வந்தார்.

கிழவர் சிவராமனைப் பார்த்து "சிவராமா, எப்படி இருக்கிறீர்கள். உங்களைப் பார்த்து பல ஆண்டுகள் ஆகி விட்டனவே, நல்ல வேளை இப்பொழுது உங்களை நான் பார்த்தது ஆண்டவன் செயல்தான்" என்றார்.

சிவராமன் அந்தக் கிழவரைப் பார்த்து "என்னய்யா சொல்லுங்கள் என்ன விசேஷம். சரி இப்படி மரத்தின் நிழலுக்கு வாருங்கள் பேசலாம்" என்றபடி, பெரியவரை அருகில் இருந்த வேப்பமர நிழலுக்கு அழைத்துச் சென்றார்.

அந்த வேப்பமர நிழல் வெயிலுக்கு இதமாக இருந்தது. நிழலில் சிறிது நேரம் அமைதியாக ஓய்வெடுத்தார் பெரியவர். பின்னர் சிவராமனிடம்,



RangaRakes

"சிவராமா, நான் பல புண்ணியத் தலங்களுக்கும் சென்று இறைவனைத் தரிசித்து வரலாம் என விரும்புகிறேன்." என்றார்.

உடனே சிவராமன் அந்தப் பெரியவரைப் பார்த்து, "ஆகா தாராளமாகச் சென்று வாருங்கள். மிகவும் இனிய செய்தியைக் கூறியுள்ளீர்கள். தங்களுக்கு நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா? கூறுங்கள்" என்றார். பணிவுடன்.

உடனே அந்தப் பெரியவர் சிவராமனைப் பார்த்து, "ஆமாப்பா, நீ எனக்கொரு பெரிய உதவியைச் செய்ய வேண்டும். என்னிடம் பத்தாயிரம் பொற்காசுகள் உள்ளன. நான் வெளியூர் சென்று திரும்பும்வரை இவை உன்னிடம் பத்திரமாக இருக்கட்டும். நான் திரும்பி வந்த பிறகு இந்தப் பொற்காசுகளை வாங்கிக் கொள்கிறேன்.

இந்த உதவியை மட்டும் நீங்கள் எனக்குச் செய்ய வேண்டும். செய்வீர்களா?" என்று அன்புடன் கேட்டார்.

உடனே சிவராமன் அந்தப் பெரியவரைப் பார்த்து, "என்னங்கய்யா, இந்த உதவியைக் கூடவா நான் உங்களுக்குச் செய்ய மாட்டேன். இந்த உதவியை நான் உங்களுக்குச் செய்யவில்லையென்றால் இத்தனை ஆண்டுகள் நான் தங்களுடன் பழகியதற்கு என்ன பிரயோசனம்"? என்று கூறினார்.

உடனே அந்தப் பெரியவர் சிவராமனைப் பார்த்து, "நல்லது சிவராமா. இது பத்தாயிரம் பொற்காசுகள் உள்ள பணப்பை



tamilnavarasam.com

பத்திரமாக வைத்திருங்கள்'' என்று கூறிவிட்டு, பணப்பையைச் சிவராமனிடம் கூறிவிட்டுப் பயணமானார்.

காலங்கள் கடந்தன.

வயதான பெரியவர் சுற்றுப் பயணம் முடித்து விட்டு திரும்பினார்.

பிறகு சிவராமனைப் பார்த்து, தான் அவரிடம் கொடுத்து வைத்திருந்த பொற்காசுகளைக் கேட்டார்.

சிவராமனோ, "என்னய்யா உளறுகிறீர்கள். தாங்கள் என்னிடம் பொற்காசுகளைக் கொடுத்தீர்களா? அப்படி நீங்கள் கொடுத்ததாகவும், நான் வாங்கியதாகவும் என் நினைவில் இல்லை'' என்றார்.

பெரியவர் மனம் வேதனையடைந்தார். அவர் சிவராமனைப் பார்த்து, "சிவராமா, நீ என்னுடன் பல்லாண்டுகள் பழகியவன். எனது நெருங்கிய நண்பன். நான் உன்னிடம்தானே பொற்காசுகள் கொடுத்துவிட்டுச் சென்றேன். இப்பொழுது இல்லை என்று சொல்கிறாயே. நீ சொல்வது உனக்கே நன்றாக இருக்கிறதா? நன்கு யோசித்துப் பார்.

அன்று அந்த வேப்பமரத்தடியில்தானே நான் உன்னிடம் பத்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்துவிட்டுச் சென்றேன். எனவே, தயவு செய்து அவற்றை என்னிடம் ஒப்படைத்து விடு'' என்று புலம்பினார்.



RangaRakes

உடனே சிவராமன் அந்தப் பெரியவரைப் பார்த்து, "ஐயா தங்களை யார் என்றே எனக்கு தெரியாது. நான் உங்களுடைய நண்பன் என்று கூறுகிறீர்கள். என்னிடம் பத்தாயிரம் பொற்காசுகள் கொடுத்ததாகவும் கூறுகிறீர்கள் உங்களுக்கென்ன பைத்தியமா?'' என்று நாடகமாடினார்.

சிவராமன் கூறியதைக் கேட்ட அந்தப் பெரியவர் பெரிதும் வேதனைப்பட்டு, அழத் தொடங்கினார். தான் அவருடன் பல ஆண்டுகள் பழகியிருந்தும் தன்னை யாரென்றே தெரியவில்லை என்று கூறியதை எண்ணிப் பொறுமினார்.


அப்பொழுது பீர்பால் அந்த வழியே வந்தார். பெரியவர் அழுவதைக் கண்டார். அவரைத் தம் அருகே அழைத்து விசாரித்தார். பெரியவரும் அனைத்து விவரங்களையும் ஒன்று விடாமல், பீர்பாலிடம் கூறினார்.

உடனே பீர்பால் அந்தப் பெரியவரைப் பார்த்து, "பெரியவரே, கவலைப்படாதீர்கள். உங்களுக்கு நீதி கிடைக்க நான் ஏற்பாடு செய்கிறேன். நாளை அரண்மனைக்கு வந்து மன்னரிடம் முறையிடுங்கள். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்படாமல் தைரியமாகச் செல்லுங்கள்'' என ஆறுதல் கூறி, அந்தப் பெரியவரை அனுப்பி வைத்தார் பீர்பால்.

பெரியவர் மன நிம்மதியில் தம் வீடு போய்ச் சேர்ந்தார்.



tamilnavarasam.com



மறுநாள் காலையில் அந்தப் பெரியவரை முன் கூட்டியே சந்தித்த பீர்பால், சில விவரங்களைக் கூறி, அதுபோல் நடந்து கொள்ளுமாறு கூறிவிட்டு, அரண்மனைக்குச் சென்றார்.

அரண்மனையில் பீர்பால் தமக்கு எதுவுமே தெரியாதது போல் அமைதியாக அமர்ந்திருந்தார். அப்பொழுது அந்தப் பெரியவர் அங்கு வந்து மன்னர் அக்பரைக் கண்டு தன் பிரச்சனையை அவரிடம் கூறிவிட்டு, நீதி வழங்குமாறு கேட்டு நின்றார்.

பெரியவரிடம் அனைத்து விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்ட மன்னர், தம் காவலரை அனுப்பி சிவராமனை வரவழைத்தார்.

சிவராமன் வந்ததும் மன்னன் அந்தப் பெரியவரைக் காட்டி, "இந்தப் பெரியவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

அதற்கு சிவராமன் மன்னரைப் பார்த்து, "இவர் யார் என்றே



RangaRakes

எனக்குத் தெரியாது. இப்பொழுதுதான் முதல் முறையாகப் பார்க்கிறேன்." என்று வாய் கூசாமல் பொய் சொன்னார்.

சிவராமன் பொய் சொல்லுகிறார் என்பதை மன்னர் நன்கு புரிந்து கொண்டார்.

உடனே அரசர் அந்தப் பெரியவரைப் பார்த்து "என்ன பெரியவரே, சிவராமன் கூறுவதைக் கேட்டீர்களா, என்றார்.

அதற்கு அந்தப் பெரியவர் மன்னரைப் பார்த்து, "மன்னா, தாங்கள் நீதி நெறி தவறாமல் ஆட்சி செய்து வருகிறீர்கள். உங்கள் முன்னேயே இவர் பொய் கூறினால் நான் இனி என்ன செய்வேன்? இனிமேல் தாங்கள் என்ன கூறினாலும் ஏற்றுக் கொள்கிறேன்" என்று அழுதார்.

மன்னர் பீர்பாலை அழைத்து அந்த வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்குமாறு கட்டளையிட்டார்.

உடனே பீர்பால் அந்தப் பெரியவரைப் பார்த்து, "ஐயா பெரியவரே, தாங்கள் சிவராமனிடம் பணம் கொடுத்தேன் என்று கூறினீர்களே, அதற்கு சாட்சி யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

உடனே அந்தப் பெரியவர் பீர்பாலைப் பார்த்து, நான் சிவராமனிடம் பத்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்ததற்கு



tamilnavarasam.com

வேப்பமரம்தான் சாட்சி. நான் அந்த வேப்பமரத்தின் அடியிலிருந்து தான் சிவராமனிடம் பொற்காசுகளைக் கொடுத்தேன் என்றார்.

உடனே பீர்பால் அந்தப் பெரியவரைப் பார்த்து, "என்ன வேப்பமரம் சாட்சியா" என்று கேட்டார்.

அதற்கு பெரியவர், "ஆமாம் அந்த வேப்பமரம் தான் சாட்சி. நீங்கள் விரும்பினால் அந்த வேப்பமரத்தை இந்த அரசவைக்கே அழைத்த வந்து சாட்சி சொல்ல வைக்கிறேன்" என்றார்.

உடனே அந்தப் பெரியவர் "இதோ போய் அந்த மரத்தை அழைத்து வருகிறேன்" என்று புறப்பட்டுச் சென்றார்.

பெரியவரின் செயல்கண்டு சிவராமன் சிரித்தார். இதை பீர்பால் பார்த்தார். உடனே அவர் சிவராமனைப் பார்த்து, "என்ன சிவராமன் சிரிக்கிறீர்?" என்று கேட்டார்.

உடனே சிவராமன் பீர்பாலைப் பார்த்து, "ஐயா அந்த வேப்பமரம் என்ன பக்கத்திலேயா இருக்கிறது. இவர் போய் திரும்புவதற்கு மாலை ஆகிவிடும். அதுமட்டுமல்ல, மரம் எங்கேயாவது வந்து சாட்சி சொல்லுமா? என்றார்.

உண்மையைத் தன் வாயாலேயே உளறி விட்டார் சிவராமன். உடனே பீர்பால் துள்ளி எழுந்தார். உடனே அவர் சிவராமனைப் பார்த்து,



RangaRakes

"சிவராமா, நீங்கள் பெரியவரிடம் பணம் வாங்கியது உண்மையாகிவிட்டது. இதனை உன் வாயாலாயே ஒப்புக் கொண்டால் தண்டனையிலிருந்து தப்பலாம்" என மிரட்டினார்.

இனிமேல் தன்னால் எதையுமே மறைக்க முடியாது என்று முடிவுக்கு வந்த சிவராமன், தன் தவறை ஒப்புக்கொண்டார்.

பீர்பால் அந்தப் பெரியவரை அழைத்து, சிவராமனிடமிருந்து பத்தாயிரம் பொற்காசுகள் அடங்கிய அவருடைய பணப்பையை வாங்கிக் கொடுத்தார்.

தன் பணம் கிடைத்த மகிழ்ச்சியில் அந்தப் பெரியவர் மன்னர் அக்பருக்கும், பீர்பாலுக்கும் தன் நன்றியைக் கூறி விடைபெற்றார்.

சரியான தீர்ப்பு வழங்கிய பீர்பாலை மன்னர் வெகுவாகப் பாராட்டிப் பரிசுகளை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



tamilnavarasam.com

# 18. இனிப்பு வாசனை

கோபாலன் என்பவன் ஆக்ராவில் இனிப்புப் பலகாரங்கள் விற்கும் கடை ஒன்றை வைத்திருந்தான். அக்கடையில் வகை வகையான இனிப்புகளை அவன் விற்பனை செய்து வந்தான்.

அவனுடைய இனிப்புப் பலகாரக் கடை ஆக்ராவில் மிகவும் புகழ் பெற்றது என்பதால், கடை திறந்து மூடும் வரை எந்நேரமும் மக்கள் கூட்டம் அந்தக் கடையில் அலைமோதிக் கொண்டே இருக்கும்.

அதே நகரில் மதுபாலா என்ற ஏழைத் தொழிலாளி ஒருவனும் இருந்தான். அவன் ஒரு பணக்காரரிடம் வேலைக்காரனாகப் பணியாற்றி வந்தான்.

நாள்தோறும் அவன் கோபாலனின் இனிப்புப் பலகாரக்கடையைக் கடந்து செல்வதும், மாலையில் வீடு திரும்புவதுமாக இருந்தான்.

திடீரென்று அவனுடைய முதலாளி வெளிநாடு சென்று விட்டதால்... அவனுக்கு வேலை இல்லாமல் போனது. எனினும் இனிப்புப் பலகாரக் கடையின் இனிப்பு வாசனை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனதால், அந்தக் கடையைக் கடக்கும்போது, நன்றாக இந்த இனிப்புகளிலிருந்து வரும் நறுமணத்தை இழுத்து விட்டுக் கொண்டு செல்வான்.



RangaRakes

அவனிடம் பணம் இல்லாததால் , இனிப்புகளை வாங்க முடியாததால், இனிப்புகளின் வாசனையை நெஞ்சில் நிறைத்து தன் ஆசையை அவன் பூர்த்தி செய்து கொள்வான்.

நாள்தோறும் மதுபாலா கடைமுன் நின்று வாசனை முகர்வதைக் கடை முதலாளியான கோபாலன் பார்த்தான்.

ஒருநாள் மதுபாலா கடை முன் நிற்பதைப் பார்த்து அவனைக் கூப்பிட்டான் கோபாலன்.

“எதற்காக என் கடைமுன் நிற்கிறாய்?” கேட்டான் கோபாலன்.

“சும்மா நிற்கிறேன்” பதில் சொன்னான் மதுபாலா

“சும்மா நிற்பதாகத் தெரியவில்லையே” கேட்டான் கோபாலன்.

“எனக்கு இனிப்புகளின் வாசனை மிகவும் பிடித்திருக்கிறது அந்த வாசனையை முகர்ந்து மகிழ்கிறேன்” பதில் சொன்னான் மதுபாலா.

“அவ்வாறு செய்வது தவறு என்பதை நீ அறியாயோ?” கேட்டான் கோபாலன்.

“இதில் என்ன தவறு இருக்கிறது? இனிப்பின் வாசனை காற்றில் வருகிறது. அதை முகர்கிறேன். வாசனை அனைவருக்கும் பொதுவானதுதானே?” பதில் சொன்னான் மதுபாலா.



tamilnavarasam.com

"இனி நீ என் கடை முன் நின்றால் உன்மீது வழக்குத் தொடுப்பேன். என் கடை இனிப்பு வாசனையைப் பணம் கொடுக்காமல் முகர்வது சட்டப்படி குற்றம்" என்று எச்சரித்தான் கோபாலன்.

மறுநாள் மதுபாலா தன் கடைமுன் நண்பன் ஒருவருக்காக நின்றிருந்தபோது கோபாலன் அவனைப் பிடித்து அரண்மனைக்கு இழுத்துச் சென்றான்.

இந்த வழக்கு பீர்பாலிடம் வந்தது.

கோபாலன் பீர்பாலைப் பார்த்து "ஐயா, இவன் என் கடை முன்நின்று காசு கொடுக்காமல் இனிப்புகளின் வாசனையை நாள்தோறும் முகர்கிறான்.." என்றான்.

பீர்பாலுக்கு கோபாலனின் புகார், சிரிப்பை வரவழைத்தது. உடனே பீர்பால் கோபாலனைப் பார்த்து, "உன் கடை இனிப்புப் பொருளை மதுபாலா திருடவில்லையே" என்று கேட்டார். உடனே கோபாலன், "இனிப்புப்பொருளைத் திருடுவதும், அவற்றின் வாசனையை முகர்வதும் ஒன்றுதான்" என்றான்.

உடனே பீர்பால் மதுபாலாவைப் பார்த்து "ஐயா நீங்கள் இவர் கடையின் இனிப்புப் பொருள்களைக் காசு கொடுக்காமல் முகர்ந்தீரா?" என்று கேட்டார்.

உடனே மதுபாலன் "ஆமாம் ஐயா," என்று பதில் அளித்தான்.



RangaRakes



உடனே பீர்பால் தன் பாக்கெட்டிலிருந்து ஒரு தங்க நாணயத்தை எடுத்து அதனை மதுபாலாவிடம் கொடுத்து "மதுபாலா நீ இனிப்பின் வாசனையை முகர்ந்தாய் அல்லவா. அதைப்போல கடை முதலாளியின் மூக்கின் கீழே இந்த நாணயத்தை தேய்த்து விடு. அவர் இதன் வாசனையை பதிலுக்கு முகரட்டும்" என்றார்.

உடனே கோபாலன் பீர்பாலைப் பார்த்து, "ஐயா, என் முட்டாள் தனத்தை எண்ணி வெட்கப்படுகிறேன். பணம் இருக்கும் ஆணவத்தால் எதையும் செய்யலாம் என்று எண்ணி விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றான்.



tamilnavarasam.com

உடனே பீர்பால் மதுபாலாவைப் பார்த்து, "ஐயா, இந்தத் தங்க நாணயத்தை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இதில் உங்களுக்குப் பிடித்த இனிப்புகளை வாங்கிச் சாப்பிடுங்கள்" என்றார்.

மதுபாலா பெரிதும் மகிழ்ந்தான்.

பீர்பால் தமக்கு இனாமாக வழங்கிய தங்கக் காசில் தனக்குப் பிடித்த இனிப்புகளை அவன் வாங்கிச் சாப்பிட்டான்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

## 19. பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும்

அக்பர் அரசாளும் நாட்டில் ஒரு சமயத்தில் பிச்சைக்காரர்கள் அதிகரித்து விட்டனர். அரசரின் காதுக்கும் இந்த விஷயம் எட்டியது. என்ன செய்வது என யோசித்தார் அக்பர்.

காவலர்களை அனுப்பி, பிச்சைக்காரர்களைப் பற்றி விசாரித்து வர ஆணையிட்டார் அக்பர். விரைவில் அவர்களும் விசாரித்து அரசவை திரும்பினார்கள்.

"அரசே, நம் நாட்டில் உள்ள பிச்சைக்காரர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது. அவர்களுள் பாதிக்கு மேல் குருடர்களாகவும், கால் நடக்க முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள்" என்றனர்.

காவலர்கள் கூறியதைக் கேட்ட அரசர் மனம் வேதனை அடைந்தார். "நம் நாட்டில் இவ்வளவு பிச்சைக்காரர்களா, அதுவும் பார்வை அற்றோரும், நடக்க முடியாதவர்களுமாய் கஷ்டப்படுகிறார்களா? என்றவர் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்."

"இனிமேல் நாள்தோறும் மதியம் நம் உணவுக் கூடத்தில் அவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்" என அறிவிக்க ஆணையிட்டார்.



tamilnavarasam.com

அரசரின் திட்டம் நடைமுறைக்கும் வந்தது. மதிய உணவு உண்பதற்காகக் கூட்டம் கூடிவிட்டது. அந்த உணவுக் கூடத்தில் கணக்கற்றோர் வந்து உணவு உண்டுச் சென்றனர்.

கண்பார்வை அற்றவர்களும், கால் ஊனமுற்றவர்களும் மதிய நேரம் தவறாமல் வந்து உணவு உண்டனர். இதனால் அரசர் மனம் மகிழ்ந்தார். இனிமேல் இவர்கள் துன்பப்பட மாட்டார்கள் என்றும் எண்ணினார்.

ஆனால் பீர்பால் மட்டும் மனம் நொந்தார். இந்த அன்னதானத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என எண்ணினார்.

அதற்குக் காரணமும் இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல சாப்பிட வருபவர்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே சென்றது.

மன்னர் எதைப்பற்றியும் கவலைப்படாமல் அனைவருக்கும் அன்னதானம் செய்ததுடன், ஆடைகளையும் வழங்கினார்.

இதைப்பற்றி எடுத்துக் கூறினாலும் கேட்டுக் கொள்ளும் மனநிலையில் அரசர் இல்லை என்பதையும் பீர்பால் நன்றாக அறிந்திருந்தார். இப்படியே போனால் அரண்மனை கஜானா விரைவிலேயே காலியாகி விடும் என்றும் உணர்ந்திருந்தார் பீர்பால்.

விரைவில் இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதையும் நினைத்துச் செயல்பட்டார் பீர்பால்.



RangaRakes

ஒருநாள் மதியவேளையில் உணவு பரிமாறுவதை ஒரு மணி நேரம் தள்ளிப் போடுமாறு வேலையாட்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தனர்.

ஒருமணி நேரம் கழிந்ததும், அரசரும், பீர்பாலும் உணவுக் கூடத்தைப் பார்வையிட வந்தனர். அரசரும் கூட்டத்தைப் பார்த்தார்.

அப்பொழுது அங்கே நின்றிருந்த வேலைக்காரர்கள் ஓரிடத்தைக் காட்டி, "அதோ அங்கேதான் இனிமேல் சாப்பாடு போடுவார்கள். சீக்கிரம் பந்திக்கு முந்துங்கள்" என்றார்கள்.

காவலர்கள் இப்படிக் கூறியதும் ஏற்கனவே மிகுந்த பசியில் இருந்த அனைவரும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். அவர்கள் ஓடுவதை அரசரும், பீர்பாலும் பார்த்தனர்.

அரசர் ஆச்சரியப்பட்டு பீர்பாலைப் பார்த்து, "பீர்பால் இவர்கள் எங்கே ஓடுகிறார்கள்?" என்று கேட்டார்.

"அரசே அவர்கள் ஓடுவது இருக்கட்டும். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. குருடர்களும், நொண்டிகளும் ஓடுகிறார்களே அதுதானே பெரிய விஷயம். தங்களை ஏமாற்றும் விஷயமும் கூட கவனித்தீர்களா அரசே" என்றார் பீர்பால்.

"ஆமாம், பீர்பால், இவர்கள் உண்மையில் ஊனமுற்றவர்கள் இல்லையா?" என்று கேட்டார்.



tamilnavarasam.com

“இல்லை அரசே, இவர்கள் ஊனமுற்றவர்கள் போல் நடிக்கிறார்கள். இவர்கள் அனைவரும் சோம்பேறிகள்” என்றார் பீர்பால்.

“இப்பொழுது உண்மையைப் புரிந்து கொண்டேன். இனி நான் என்ன செய்ய வேண்டும். நாளை முதல் அன்னதானத்தை நிறுத்தி விடுவதாக அறிவிக்கட்டுமா? என்று பீர்பாலைப் பார்த்துக் கேட்டார் அரசர்.

உடனே பீர்பால் அக்பரைப் பார்த்து, “அரசே, அன்னதானத்தை நிறுத்த வேண்டாம். பாத்திரமறிந்து பிச்சையிட வேண்டும். அதாவது, உண்மையிலேயே கண்பார்வை இல்லாதவர்களுக்கும், கால் ஊனமுற்றவர்களுக்கும் அன்னதானம் செய்ய ஆணையிடுங்கள்” என்றார்.

சரி, இனி அப்படியே செய்வோம் என மகிழ்ந்தார் அரசர். பீர்பாலைப் பாராட்டி, அவருக்கு கை நிறைய பரிசுகளையும் வழங்கினார் அக்பர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes

## 20. மகிழும்படி பேசினால் பரிசு கிடைக்கும்

ஒருநாள் அக்பரும், பீர்பாலும் சுவாரஸ்யமாக எதைப் பற்றியோ பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது காவலன் ஒருவன் வந்து, “மன்னருக்கு வணக்கம், ஜோதிடர் ஒருவர் தங்களைப் பார்க்க வந்துள்ளார்” என்றான்.

“உள்ளே வரச் சொல்” என்று ஆணையிட்டார் அரசர். ஜோதிடர் உள்ளே வந்ததும் மன்னரைப் பார்த்து, “மாமன்னருக்கு என் வணக்கம். நான் பல நாடுகளுக்கும் சென்று ஜோதிடம் பார்த்துக் கூறி பாராட்டும் பரிசுகளும்பெற்றிருக்கிறேன் இன்று தங்களைப் பார்க்க வந்திருக்கிறேன்” என்றார்.

உடனே மன்னர், “மிக்க மகிழ்ச்சி ஜோதிடரே, எனக்கும் ஜோதிடம் பார்த்து பலனைக் கூறுங்கள் பார்ப்போம்” என்றார்.

அரசரின் ஜோதிடத்தைப் பார்த்தார் ஜோதிடர். பின்னர் “இந்த ஜாதகக்காரரின் உறவினர்கள் பலரும் இவருக்கு முன்னாலேயே இயற்கை எய்தி விடுவார்கள் ” என்றார்.

இதைக் கேட்டதும் அரசருக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது. “போதும் நீங்கள் ஜாதகம் பார்த்தது. என் முன்னால் நிற்காமல் ஓடிவிடுங்கள்” என்றார்.



tamilnavarasam.com

தன் திறமையைக் காட்டிப் பாராட்டும், பரிசுகளும் வாங்கலாம் என எண்ணி வந்த ஜோதிடருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

மறுநாள் ஜோதிடர், பீர்பாலின் வீட்டுக்குச் சென்று தன் மனக்குறையை வெளியிட்டார். அவருக்கு ஆறுதல் கூறினார் பீர்பால்.

பீர்பால், ஜோதிடரைப் பார்த்து, "உங்களுக்கு எவ்வளவுதான் திறமை இருந்தாலும், பிறர் மகிழும்படி பேசும் திறமையும் வேண்டும். நாளையும் மாறு வேடத்தில் வந்து அரசரைப் பாருங்கள். நான் சொன்னபடி கூறுங்கள் மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அவருடைய காதில் இரகசியம் கூறி அனுப்பினார்."

மறுநாள் அக்பரும், பீர்பாலும் பேசிக்கொண்டிருந்தனர் அப்பொழுது ஜோதிடர், முனிவர் போன்று மாறு வேடமிட்டு மன்னர் முன் வந்து நின்றார்.

பீர்பால், அரசரைப் பார்த்து, "அரசே இவர் நான் கூறித்தான் உங்களைப் பார்க்க வந்துள்ளார். ஜோதிடம் பார்ப்பதில் வல்லவர். தங்களுக்கும் பார்க்கவே வரவழைத்தேன் என்றார்."

உடனே அரசர், "அப்படியா, சிறப்பாக ஜோதிடம் பார்ப்பாரா... நேற்று வந்தவன் போல் இல்லாமல் இருக்க வேண்டும்" என்றார்.

உடனே பீர்பால், "அப்படியெல்லாம் இல்லை அரசே. இவர் தங்கள் ஜாதகத்தை உண்மையிலேயே நன்கு பார்த்து, சிறந்த



RangaRakes



பலனைக் கூறுவார்" என்றார்.

ஜோதிடர், அரசரின் ஜாதகத்தைப் பார்த்தார்.

"ஆகா, இதுவல்லவோ ஜாதகம், அபூர்வமான ஒருவருக்குத்தான் இப்படிப்பட்ட சிறந்த ஜாதகம் அமையும். அவர் பெரும் அதிர்ஷ்டசாலிதான்" என்று கூறியதும் அரசரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.



tamilnavarasam.com

அந்தச் ஜோதிடர் மேலும், "இவரது கை எப்பொழுதும் கொடுக்கும் கைதான். இவருக்கு எப்பொழுதுமே வெற்றிதான், இவரை வெல்ல யாருமே கிடையாது. இவர் நல்ல உடல் நலத்துடன், செல்வ வளத்துடன் நீண்டநாள் வாழ்வார்." என்றார்.

இதைக் கேட்ட அரசரின் மகிழ்ச்சி மீண்டும் எல்லையின்றி போய்விட, அந்த ஜோதிடரைப் பாராட்டி, அவர் கை நிறையும்படி ஏராளமான பரிசுகளை வாரி வழங்கினார் அரசர்.

பலபரிசுகளைப் பெற்ற அந்த ஜோதிடர் அரசருக்கும், பீர்பாலுக்கும் தன் மனமார்ந்த நன்றி கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் தன் நாடு போய்ச் சேர்ந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



RangaRakes
tamilnavarasam.com